பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564,566, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
(சி-2751)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 06 செவ்வாய்க்கிழமை (23-10-2001) தொலைபேசி: 3378 ஒலி 316

## வவுனியாவில் கிளைமோர் தாக்குதல்
### பொலிஸார் உட்பட இருவர் பலி

(வவுனியா)

வவுனியாவிலுள்ள குடுவெலஎனும்பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர்க் கண்ணி வெடித் தாக்குதலில் உழவு இயந்திர மொன்று வெடித்துச் சிதறியது அதில் பயணம் செய்த இரண்டு படையினர் கொல்லப் பட்டனர்.

திருகோணமலை வவுனியா வீதியில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

குடுவெல கிராமப்பகுதியில் அமைந்துள்ள முன்னணிக் காவலரண்களில் உள்ள படையினருக்கு நேற்றுக் காலை 10.30 மணியளவில் குடி நீர் எடுத்துச் சென்ற உழவு இயந்திரமே கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதலுக்கு இலக்

(8ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க.புத்திரசிகாமணி பொ.ஐ.முக்கு தாவினார்

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியில் முக்கியதமிழ்த் தலைவர்களில் ஒருவரான முன்னாள் எம் பி புத்திரசிகாமணி நேற்று ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவை சந்தித்து பொது ஜனஐக்கிய முன்னணியில் இணைந்து கொண்டார்.

ஐக்கியதேசியக் கட்சியில் உள்ள வகுப்புவாதத் தலைவர்களினால் தமிழ்மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கப்போவதில்லை இனப்பிரச்சினை தீர்வு காணும் விடயத்தில் ஐக்கியதேசியக்கட்சிக்கு எந்த வதமான தகுதியும் இல்லை ஐக்கியதேசியக்கட்சி மக்கள் மத்தியில்இருந்து அதன்நம்பகத்தன்மையை இழந்துவிட்டதுடன் யானைச்சின்னத்தையும் அதுபறி கொடுத்து

(08ம் பக்கம் பார்க்க)

# எதிர்வருந்தேர்தலில் வெற்றி பெற்றதும்
# விடுதலைப் புலிகளுடன் பேசி
# இனப்பிரச்சினையைத் தீர்ப்போம்!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(நமது நிருபர்)

சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்குப் பங்கம் ஏற்படாத விதத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண வேண்டுமென்ற உறுதிப்பாடு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிடமே உண்டு.

ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற விடயத்தில் சிறிதளவாவது ஆர்வம் இருக்கவில்லை. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

1972ம ஆண்டுமுதல் ஐக்கியதேசியகட்சி உறுப்பினராகவும் மத்திய குழு உறுப்பினராகவும் எம் பியாகவும் இருந்த ... ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து விலகி பொதுஜனஐக்கியமுன்னணியில் இணைந்துகொண்டமை தொடர்பாக கருத்துத் ... கா மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதா

[08ம் பக்கம் பார்க்க]

## 3 லட்சம் கள்ள வாக்குகள் போடப்படும் சாத்தியம்
### பெபரல்அமைப்புஎச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் 8லட்சம் கள்ளவாக்குகள் அளிக்கக்கூடிய சூழ்நிலை உள்ளதாக பெபரல் அமைப்பின் பணிப்பாளர் கிங்ஸ்லி றொட்றிகோ தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்சுமார்15லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்புக்களிலிருந்து நீக்கப்படாமல் உள்ளது 8லட்சம்வாக்காளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் 3லட்சம் வாக்காளர்கள் இடம்பெயர்ந்து அகதி அந்தஸ்த்தில்வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவின்கவனத்திக்கு கொண்டு வந்துள்ளோம்.

யாழ்மாவட்டத்தில் 6லட்சம் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ளி 3லட்சம் பேரே உள்ளனர்.

வாக்குச் சாவடிகளை கண்காணிக்க ஒரு சாவடிக்கு 12 கண்காணிபபாளர் நியமிக்க விருப்பதாகவும் றொட்றிகோ கூறியுள்ளார். (டு)

1972ம ஆண்டுமுதல் ஐக்கிய தேசியககடசி உறுபபின ராகவும் மத்திய குழு,உறுப் பினராகவும் எம் பியாகவும் இருந்த புத்திரசிகாமணி ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து விலகி பொதுஜன ஐக்கியமுன் னணியில் இணைநதுகொண் டமை தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜனாதிபதிசந்திரி

...னார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதா

[08ம் பக்கம் பார்க்க]

...8லட்சம்வாக்காளர்கள் வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளனர் 3லட்சம் வாக்காளர் கள் இடம்பெயர்ந்து அகதி

...வாக்குச் சாவடிகளை கண் காணிக்க ஒரு சாவடிக்கு 12 கண்காணிபபாளர் நியமிக்க விருப்பதாகவும் றொட்றிகோ கூறியுள்ளார். (இ)

# தொண்டராசிரியர்களின் நிரந்தர நியமனம் குறித்த

## சுற்றுநிருபம் அனுப்பி வைபபு

(யாழ்ப்பாணம)

தொண்டர் ஆசிரியர் களை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குவது தொடர்பான சுற்றுநிருபம்வடக்குக் கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வர னால் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்

(08ம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டை மீளக்கைபபற்றுந் தாக்குதலுக்கு புலிகள் தயார்!

## புலனாய்வுப் பிரிவு மீண்டும் எச்சரிக்கை

(கொழும்பு)

யாழ் குடாநாட்டை மீளக் கைப்பற்றும் நோக்கில் பாரிய தாக்குதலொன்றைத் தொடுக்க விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக படைத் தரப்பை இராணுவ புலனாய் வுப் பிரிவினர் மீண்டும் எச்ச ரித்துள்ளனர்.

இதனையடுத்து குடாநாட் டின் பாதுகாப்பு நடவடிக்கை கள் பலப்படுத்தப்பட்டுப் படையினர் உசார்ப்படுத்தப் பட்டுள்ளனர். ரோந்து நடவ டிக்கைகளும் சுற்றிவளைப்புத தேடுதல்களும் பெருமெடுப் பில் முடுககி விடப்பட்டுள் ளன.

மணலாற்றுப்பகுதியில் விடு தலைப்புலிகள பெருந்தாக்கு தலொன்றை நடத்தத்திட்ட மிட்டுள்ளனரென்ற புலனாய் வுத் தகவலினால் இராணு வத்தளபதி லெப்ரினன் ஜென

(8ம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி மீனவ சங்கங்கள் திட்டமிட்டபடி இன்று பகிஷ்கரிப்பு

## பல தரப்பும் ஆதரவு தெரிவிப்பு

(மந்திகை)

வடமராட்சி கடற் பரப்பில் மீன்பிடிக்க விதிக்கப்பட்ட தடையை நீக்கக் கோரியும், கெடுபிடிகள் ஏதுமின்றி நிரந் தரமாக மீன்பிடித் தொழி லில் ஈடுபட அனுமதிக்க வேண்டுமென வலியுறுத் தி யும், இன்று வடமராடசி கடற்றொழிலாளர் சங்க சம் மேளனம் பகிஷ்கரிப்பு மற் றும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள் ளது.

கடற்றொழிலாளர் சம்மே ளனத்தின் மேற்படி போராட் டத்திற்கு பருத்தித்துறை பிர தேசசபைத்தலைவர் ஐ. ஸ்ரீ ரங்கேஸ்வரன், வடமராடசி கிழக்கு கடற்றொழிலாளர் சங்க சம்மேளனம்,வடமராட் சியிலுள்ள வர்த்தக சங்கங் கள்,மற்றும் வடமராட்சி சிற் றூழியர் சங்கங்கள் ஆகியன பூரண ஆதரவைவழங்க முன் வந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை இன்று நடை பெறவுள்ள பகிஷ்கரிப்பு உண் ணாவிரதப் போராட்டத் திற்கு பொதுமக்களை ஆத ரவு வழங்குமாறு கோரும் துண்டுப் பிரசுரங்கள் வடம ராட்சிப்பகுதியில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளமையும் இங்குகுறிப்பிடத்தக்கது.இ23

# தமிழ்க் கூட்டமைப்பை வலுப்படுத்த மேலும் முயற்சி

(கொழும்பு)

வடக்குகிழக்கில்அமைக்பட்டுள்ள நான்கு கட்சிகளின் தமிழ்ப் கூட்டமைப்பைமேலும் வலுப் படுத்துவதற்கு மூத்த கல்வி மான்கள் நடவடிக்கைஎடுத்து வருவதாகத் தெரிவிக்கபபடு கிறது.

எதிர்வரும் பொதுத் தேர்த லைமுன்னிட்டுஒன்றுபட்டுள்ள நான்கு தமிழ்க் கட்சிகள் கூட் டணியின் அரசியல் நிலைப் பாடு குறித்து தெளிவு படுத் திக் கொளளப்பட வேண்டும் என்றும், அவசரப்பட்டோ

(08ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வீடு தேவை

யாழ் நகரப் பகுதியில் இரண்டு பேர் (கணவன், மனைவி) தங்கக் கூடிய வீடு அல்லது அறை வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி விளம்பர இல. 229, மே/பா வலம்புரி, யாழ்ப்பாணம்.

(C/2761)


## தே. அ. அட்டை கண்டெடுப்பு

நயினாதீவைச் சேர்ந்த சரஸ்வதி திருநாவுக்கரசு என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் நேரில் வந்துபெற்றுக்கொள்ளலாம்.

## ஆணைக்குழு ...

பெயர் எடுத்திருக்க வேண்டும்.

சுதந்திரமான ஆணைக் குழுக்கள் மிக அவசியம். இப்போதுள்ள அரசியல் யாப்பு விதிகள் அரசியல் வாதிகளின் செல்வாக்குக்கு இடம்அளித்து விட்டன. அமைச்சர் அவையே சகலபதவி உயர்வுகளையும் தீர்மானிப்பதால், பொலிஸ் திணைக்களம் போன்றவை அரசியல் மயப்படுத்தப்பட்டு விட்டன. சுதந்திர பொதுநிர்வாக சேவைக்குழு இயங்கினால், ஒருநிர்வாக உத்தியோகத்தரின் சேவை சிறப்புகள் கவனத்துக்கு எடுக்கப்படும். பதவி உயர்வுப்பரீட்சைகளையும் ஆணைக்குழுக்களே நடத்தும். இதனால்நடுநின்று சட்ட வரம்புக்கு உட்பட்டு நிர்வாகம் புரிவோர் மதிப்புப்பெறுவர். பக்கஞ்சாராதோர் நல்ல ஜனநாயக ஆட்சி வளர வழிசெய்வர்.

கட்சி அரசியலுக்கு அப்பால் உயர்ந்த நாட்டுக்குச் சேவையாற்றிய நேர்மையான அதிகாரிகள் பலர் இன்னும் இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களை ஆணைக் குழுவினராக நியமிக்க வேண்டும்.

இக் கருத்தையே, பிராட்மன் வீரக்கூன் முன்னை நாள்ஜனாதிபதியின்ஆலோசகரும் உயர் பொது நிர்வாக சேவை அதிகாரியும் வற்புறுத்துகிறார்.

"நேர்மையுள்ள பொதுச் சேவைநிர்வாக ஆணைக்குழு, நடுநிலைமையான. நிர்வாக அதிகாரிகள் தோன்ற வழி செய்யும்.

முன்னாள் உதவிப் பொலிஸ்மா அதிபரும், தற்போதுசிராலியோன் பொலிஸ் திணைக்களத்தை மீளமைப்புச் செய்ய ஆலோசனை கூறி வருபவருமான கலாநிதி எஸ். பீ. தர்மதாஸ சில்வா கூறுகிறார்.

"நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் பொலிஸ் திணைக்களத்தை சுதந்திர முள்ளதாகச் செய்யும்கருத்து இருந்து வருகிறது. இதற்கென அமைக்கும் ஆணைக்குழு இரு குறிக்கோள்களைக் கொண்டு செயற்பட வேண்டும்; 1) பொலிஸ் துறையில் அரசியல்மயமானதன்மையைமுற்றாக நீக்குதல் 2) இக் குழுவே பொலிஸின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்; ஆங்கில ஆட்சியில் பொலிஸ் துறை குடியேற்ற வாத நலன்களையே பேணி வந்தது. அது மக்கள் சேவை மனப்பாங்கு உடையதாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். அது நிகழாதபடியால் தான் மக்கள் அரசியல் வாதியின் தயவை நாடினர், அதன் பலனே பொலிஸ்துறை கட்சிச் சார்புள்ளதாயும், அரசியல் மயப்படுத்தப்பட்டதாயும் ஆகியது. சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு பொலிஸிடமிருந்து அரசியலை முற்றாக விலக்கிவிடும். பொலிஸ் உத்தியோகத்தர் அரசியல் வாதிகளின் தயவை நாடும் தேவை இராது. 1947 முதல் ஒவ்வொரு பொலிஸ் ஆணைக்குழுவும் பொலிஸ் துறையில் அரசியல் வாதிகளின் ஆதிக்கம் இருக்கிறது. என முறையிட்டு வந்துளது. ஒரு முறை பொலிஸ் திணைக்களம் சுதந்திரமாக இயங்க ஒம்புட்ஸ்மன் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் கருதப்பட்டது. பொலிஸ் நிர்வாகம் இந்த சுதந்திர பொலிஸ் ஆணைக்குழுவின் கீழ் இருக்க வேண்டும். இங்கிலாந்தில் உள்ளூர் ஆட்சி அமைச்சின் கீழ் பொலிஸ் அதிகார சபை இயங்குகிறது. எந்த ஒரு அரசாங்கமும் பொலிஸை தன் செல்வாக்கினுள் வைத்திருக்கவே முயலும். ஆதலால் கட்சிகளின் மேலாண்மைக்கு அப்பாற்பட்ட சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு அவசியம்.

இவ்வறிஞர்களின் கருத்துக்களை நோக்குமிடத்து, நாலு ஆணைக்குழுக்கள் வைத்தவுடன் இலங்கை ஜனநாயகத்தின் சிங்காரத் தோட்டமாகிவிடும் என்று கற்பனை செய்வது உசிதமல்ல. உண்மை ஜனநாயகம் உதயமாக, ஒரு அடி முன் வைத்ததாகும் என்று தான் சொல்லலாம்.

"எவ் வழி நல்லவர் ஆடவர் அவ் வழி நல்லை, வாழிய நிலனே" என்ற சான்றோர் கூற்றும், பழுத்த அரசசேவையாளர் பிராட்மன் வீரக்கூனின் கருத்தும் மக்கள் திருந்தினால் ஆணைக்குழு அங்கத்தவர் திருந்திய சேவையைச் செய்வர் என்பதையே காட்டும்.

# இன்றைய மோசமான கலை வடிவங்கள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

பத்தி எழுத்துக்கள் தனியே தமது மண்ணைமட்டும் பிரதிபலிப்பன அல்ல உலக கலை கலாசார ரசனை போக்குகளை அவை உள்வாங்க வேண்டும். இன்று மோசமான கலைவடிவங்களுக்கு அடிமையாகும் நம்மவர்கள் அவற்றின் எதிர்காலத் தாக்கங்கள்குறித்து விழிப்படைய வேண்டும்.

இவ்வாறு செம்பியன் செல்வன் அ. யேசுராசாவின் 'தூவானம்' நூல் அறிமுக விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் இந்த அறிமுக விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

குப்பிளான் ஐ. சண்முகன் பேசுகையில், தூவானம் காலத்தின் பதிவேடாக விளங்குகிறது என்றும் பத்தி எழுத்துக்களால் வாசகர்கள் முழுமை பெறுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் திரைப்படம், எழுத்தாளர்கள், ஓவியங்கள், பத்திரிகைகள் இவ்வாறு பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய தூவானம் உள்ளடக்கத்திலும் நூல் அமைப்பிலும் அழகாக உள்ளது என்று கூறினார்.

அருள்திரு அ. ஜெயசேகரம் அடிகள் பேசுகையில் தமிழ் மொழிக் கட்டுரைகளில் ஆங்கிலச் சொற்களை இயன்றளவு தவிர்க்கவேண்டும். தாய் மொழியிலேயே அனைத்து தொழில்நுட்பங்களையும் சாதாரண மக்களுக்கு வழங்க வேண்டும். இதனால் தமிழின் தனித்துவத்தைக் காப்பாற்றமுடியும் என்றார்.

ஜோன்சன் ராஜ்குமார் பேசுகையில், கலை, இலக்கியப் போக்குகளை அறிந்து கொள்ள 'தூவானம்' பெருதவியாக உள்ளது. இளம் இலக்கியகாரர் அறிந்து கொள்ளவேண்டிய விடயங்கள் பல 'தூவானம்' நூலில் உள்ளனஎன்று குறிப்பிட்டார்.

பொன் பூலோகசிங்கத்தின் உரையின்பின் நூலாசிரியர் அ. யேசுராசா ஏற்புரை வழங்கினார். (எ-106)

## நவராத்திரி விழாவில் 44 பேர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் சனசமூக நிலைய நவராத்திரி விழா கடந்த ஞாயிறன்று நிலையத் தலைவர் க. குமாரசாமி தலைமையில் நடை பெற்றபோது, பல்கலைக்கழக பட்டம் பெற்ற 20 பேர் உட்பட க. பொ. த (சா/த) பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சனசமூக நிலைய எல்லைக் குட்பட்ட 44 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

வைத்திய கலாநிதி திருமதி கணேசமூர்த்தி, நல்லூர் பிரதேச சபைத் தலைவர் என். மணிபல்லவராஜன் ஆகியோர் இவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர்.

முது மாணிப்பட்டம், பெற்ற கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டம் பெற்றமு சிவபாதம், செல்வி ஆ. கேதீஸ்வரி ஆகியோரும் கௌரவிக்கப்பட்டவர்களில் அடங்குவர். (உ)

## சகலகலாவல்லி மாலை மனனப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலக நலன்புரிச்சங்கம் மாணவர் மத்தியில் நடத்திய சகலகலா வல்லிமாலை மனனப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வெற்றிபெற்ற மாணவர்களது விபரம் வருமாறு:

**மேற்பிரிவு**

1 ஆம இடம்
ஸ்ரீ சிறீமகள் யா/ வேம்படி மகளிர் கல்லூரி.

2 ஆம இடம்
க. தர்சனன் யாழ். இந்துக் கல்லூரி.

3 ஆம் இடம்
இ. தேவமாறன் யா/ பரி. யோவான் கல்லூரி.

**கீழ்ப்பிரிவு**

1 ஆம இடம்
தெ. பவனுஜா யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

2 ஆம் இடம்
செ. ஆதித்தன் யா/இந்து கல்லூரி.

3 ஆம் இடம்
த. ஜனகன் யா/புனித பரியோவான் கல்லூரி.

இவர்களுக்கான பரிசில்கள் இன்று மு.ப 10.00 மணிக்கு யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. (உ)

## யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழாவும் மலர் வெளியீடும் இன்று காலை 9.00 மணிக்கு அதிபர் சு. புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேல் பிரதமவிருந்தினராகவும், வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். [இ]

## காலாவதியான பிஸ்கட் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் இயங்கும் தனியார் விற்பனை நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான 100கிராம் எடையுள்ள 6 பிஸ்கட் பெட்டிகளை வெளிக்கள வேலைகளில் ஈடுபட்டிருந்த மாநகர சபையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு. சிவலிங்கம் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் து. மகாதேவன் ஆகியோர் அடங்கிய குழு கண்டுபிடித்து அவற்றை அழித்துள்ளனர். (உ)

## திருத்தம்

நேற்றைய வலம்புரியில் சுன்னாகம் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் பொதுச் சந்தை இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் தொடர்பான 2002 ஆம் ஆண்டுக்கானகேள்வி அறிவித்தல் விளம்பரத்தில்-

சுன்னாகம் மத்திய சந்தைக்குரிய (துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் உட்பட) ஆகக் குறைந்த மதிப்பீட்டுத் தொகை ஜி எஸ் ரி நீங்கலாக 19 லட்சத்து 91 ஆயிரம்ரூபா எனவும்-

மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை என்பதை மல்வம் மாட்டிறைச்சிக்கடை எனவும்-

இழுபொறி இயந்திரப் பெட்டியுடன் வாடகைக்கு அமர்த்தும் காலத்தை 01-01-2002 தொடக்கம் 31-12-2002எனவும் திருத்தி வாசிக்குக.

## திறப்புவிழா

(அச்சுவேலி)

அச்சுவேலி மேற்குவளர்மதி சனசமூக நிலைய கல்வி நிறுவன திறப்புவிழா கடந்தசனிக்கிழமை தலைவர் பொ. அருளானந்தம்தலைமையில்நடைபெற்றது.

இவ்விழாற் குகோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் வலி கிழக்கு பிரதேச சபைத்தலைவர்பூ துணசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக்கலந்துகொண்டனர். (உ-218)

## உயர்மட்ட குழுவில் இலங்கையும் இணைப்பு

(கொழும்பு)

உலகப் பயங்கரவாதத்திற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பொதுநலவாய அமைப்பின் 10 உறுப்பினர் உயர் மட்டக் குழுவில் ஆசிய நாடுகளான இந்தியா, மலேசியா, இலங்கை ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

54 உறுப்பினர் கொண்ட பொதுநலவாய அமைப்பின் 10 நாடுகள் அணி பயங்கரவாதத்திற்கெதிரான சர்வதேச முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் என புதனன்று செயலாளர் நாயகம்டொன் மக்கினொன் தெரிவித்துள்ளார். (உ)


## அறிவித்தல்

சகல ப. தெ. வ. அ. கூ. சங்க
தலைவர், பொது முகாமையாளர்க்கும்

எமது நிறுவனத்துடன் கள்ளு கொள்வனவு சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களை சீர் செய்வதற்கு அதற்குரிய விபரத்தையும் அத்துடன் சங்கங்களின் அங்கத்தவர்களின் (தொழிலாளர்களின்) ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவது சம்பந்தமான விடயம் தொடர்பாக அவர்களின் விபரங்களுடன் 24 10.2001 ஆம் திகதி எமது திக்கம் வடிசாலை தலைமைக் காரியாலயத்தில் காலை 11.00 மணிக்கு சமுகம் கொடுக்கும் படி கேட்டுக் கொள்கின்றேன்.

ப. ரவீந்திரன்
பொது முகாமையாளர்,
திக்கம் வடிசாலை,
அல்வாய் மேற்கு.

(கி-2770)

## அறிவித்தல்

யாழ். மாவட்ட
சாராய விற்பனையாளர்களுக்கு
முகவர் மூலம் சாராயம் விநியோகம்

முகவராக திரு வல்லிபுரம் சிவசூரியகுமார் அவர்கள் திக்கம் வடிசாலையின் விநியோகஸ்தராகநியமிக்கப்பட்டுள்ளார். இனி வரும் காலங்களில் அவருடன்தொடர்பு கொண்டு உங்கள் தேவையை நிறைவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ப. ரவீந்திரன்
பொது முகாமையாளர்
திக்கம் வடிசாலை,
அல்வாய் மேற்கு.

(சி-2769)

# சமுர்த்தியாளருக்குரிய 45கோடி ரூபாபற்றிய விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)
சமுர்த்தி இயக்கத்திற்குரிய 45 கோடி ரூபா பணத்திற்கு என்ன நடந்தது என்பது பற்றி இப்போது விசாரணை இடம்பெற்று வருவதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை ரூபவாஹினியில் இடம்பெற்ற பேட்டி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்தார்.

வறுமையை ஒழித்துக் கட்டும் ஒருதேசிய இயக்கமாக சமுர்த்தி உருவாக்கப்பட்டது. இதனை பொதுமக்களின் நலன்கருதி அரசாங்கம் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தும்.

இதேவேளை எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் ஆட்சி கவிழ்க்கப்பட்டால் ஜனாதிபதியின் பொறுப்பில் இயங்கிவரும் சமுர்த்தி இயக்கம் நீக்கப்படும் என்று ஜனாதிபதிக்கு எதிரான பிரசாரம் ஒன்று எழுந்துள்ளது.

அந்த எதிர்ப்பிரசாரத்தில் நாட்டின் வறுமையை ஒழித்துக் கட்ட மேற்கொள்ளப்பட்ட இயக்கமே சமுர்த்தி இயக்கம் ஆனால் அதன்மூலம் நாட்டின் வறுமை ஒழிந்ததாகத் தெரியவில்லை. வறுமை ஒழிப்பிற்கு பயன்தராத அமைப்பு தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.
(செ-7)

## தேர்தலின் மறுநாள்காலை வாக்குகள் எண்ணப்படும் தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)
தேர்தலின் மறு நாள் காலையே வாக்குகளை எண்ணும் நடைமுறை பற்றி தேர்தல் ஆணையாளர் சகல கட்சிகளிடமும் கூறியுள்ளார்.

இது குறித்து தேர்தல் திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில்; இந்தியாவில் இம்முறையே பின்பற்றப்பட்டு வருகிறது.

இதனால் செலவீனமும் குறையும். மின்சார நெருக்கடி கடுமையாக உள்ளதால் அலுவலர்கள் தேர்தலன்று இரவு பணி புரிவதைத் தவிர்க்கலாம். வாக்குகளை எண்ணும் போது ஏற்படும் தவறுகளையும் இல்லாமல் செய்யலாம் என்று தெரிவித்தார்.

விரைவில் தேர்தல் ஆணையாளர் சகல அரசியல் கட்சிகளின் செயலாளர்களையும் அழைத்து இவ்விடயம் குறித்து ஆலோசிப்பார் என்று திர்பார்க்கப்படுகிறது.
(எ)

## செயலகப் பாதுகாப்பு நாளுக்கு நாள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் தினம் ஆரம்பமாகி 2நாட்கள்முடிவுற்ற நிலையில் யாழ்; செயலக தேர்தல் அலுவலகத்தில் எந்தவொரு கட்சியோ அன்றி சுயேட்சைக் குழுவோ வேட்புமனுத் தாக்கல் செய்யவில்லை

இதேவேளை, யாழ் செயலகப் பாதுகாப்பு நாளுக்கு நாள் அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

இந்தவகையில், செயலக வளவுக்குள் தேவையற்ற வாகனங்கள் எவையும் அனுமதிக்கப்படாததுடன், உட்செல்லும் ஊழியர் உட்பட அனைவரும்பலத்த சோதனையின் பின்னரே அனுமதிக்கப் படுகின்றனர்.

தவிர, தற்காலிக பொலிஸ் சோதனைச் சாவடிகள் அங்கு அமைக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸாரும், படையினரும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.
(உ-10)

## புலிகளின்படகுகளைநோக்கி, பருத்தித்துறை கடலில் படையினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
''ஒபரேசன் வருணகிரான'' நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் பருத்தித்துறை கடற்பிராந்தியத்தில் கடந்த ஞாயிறன்று மு.ப. 10.10 மணியளவில் விடுலைப் புலிகளின் படகுகள் நடமாட்டத்தைக் கண்காணித்து தாக்குதல் தொடுத்ததாகவும்,

இந்தச் சம்பவத்தில் 3படகுகள்அழிக்கப்பட்டும் 2 படகுகள் சேதமடைந்தும் இருக்கலாம் எனவும் விசேட ஊடகத் தகவல் மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புலிகள் தரப்பில் 20 பேர் உயிரிழந்தோ காயமடைந்தே இருக்கலாம் என்றும், கடற்படை உதவி லெப்டினன்தரத்தில் உள்ள ஒருவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(உ)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)
யாழ் பிரதேச செயலர் நலன்புரிச் சங்கம் நடத்தும் நவராத்திரி விழா இன்று காலை 9.00 மணிக்கு யாழ். வை: எம். சி. ஏ மண்டபத்தில் யாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கௌரவவிருந்தினராக ஒய்வு பெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு கலந்து கொள்ளவுள்ளார்.
(உ)

★ ★

இணுவில் இளந்தொண்டர் சபை நடாத்தும் வருடாந்த நவராத்திரி விழா நிகழ்வுகள் விஜயதசமி தினமான எதிர்வரும் வெள்ளிக்கிழமை சபையின பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம், இளந்தொண்டர் சபையால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பதக்கமவழங்கலும் இடம்பெறும்,
(உ)

★ ★

கொக்குவில்ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலய இந்து மாணவ மன்றத்தின் வாணி விழா நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

விழாவினைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும், சமூக ஜோதி கா கணேசதாசனின் ''தாய்மை வழிபாடு'' எனும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.
(செ)

## கைதடி கமநல சேவை நிலைய மூடாக விவசாய விதைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)
கைதடி கமநல சேவைகள் நிலையம் மூலம், அப்பகுதியில் மீளக் குடியமர்ந்த விவசாயிகளிற்கு கடன் அடிப்படையில் மரக்கறி விதைகள், விவசாய உரவகை வழங்கப்படவுள்ளன.

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இதற்கு வேண்டிய 5 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இவற்றைப் பெற விரும்பும் சம்பந்தப்பட்ட விவசாயிகள் தத்தமது விவசாயிகள் விவசாயசம்மேளனங்கள் ஊடாக தத்தமது கமநல சேவை நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.
(உ-9,19)

## யாழ்.சிறைச்சாலைக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 30 உத்தியோகத்தர் நியமனம்

(யாழ்ப்பாணம்)
யாழ். சிறைச்சாலையில் நிலவும் சிறைச்சாலை உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்பும் வகையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 30பேர், சிறைச்சாலை ஆணையாளர் உபாலி சமரவீரவினால் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தமது கடமைகளை எதிர்வரும் முதலாம் திகதி பொறுப்பேற்கவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதேவேளை, யாழ், சிறைச்சாலையில்ஏற்கனவே9 சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பணியாற்றி வருகின்ற போதிலும் குறிப்பிடத்தக்களவான தமிழ்ஊழியர்கள் இங்கு பணியாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.
(உ-10)

## நவராத்திரிப் பாமாலை



சரஸ்வதி துதி

### கருணை செய்தருள்வாயே

நவராத்திரி மாலைக்கு ஒரு பாடல்
நாளும் அனுப்பிட விரும்பி
சிவராத்திரி விழித்தும் சிந்தனைக்குச்
சிலவரிகள் தாமும் வரவில்லை
அலையும் மனதை அடக்கி நானும்
அழகாய்க் கவிதையினை எழுதிட
கலைமகளே கமலாம்பி கையே
கருணை செய்தருள் வாயே

ச. ஆர்த்தி
வேம்படி மகளிர் கல்லூரி

### நல்வாழ்வு தாரும் அம்மா

வெள்ளைக் கமலத்தே வீற்றிருந்தருளும் தாயே
உள்ளமதில் உன் நினைவில் நிதம் வாழும் தமிழர்
அகதியாய் அலைந்து சகதியாய் போனார்கள்
சுகம் வேண்டி தினம் துதிக்கிறோம்.

சி. சிவகுமார்
யாழ் தேவரையாளி
தரம் -12
இந்துக்கல்லூரி

### வாழ்ந்திருவோமே

நவராத் திரியில் நாமகள் அருளை
நாடியே நாங்கள் நாவினால் துதித்து
நாளும் கல்விக் கலைகளில் சிறந்து
நாடு போற்ற வாழ்ந்திடு வோமே.

தி. மயூரகிரி
யாழ் இந்துக்கல்லூரி

### துயரைத் தீருமம்மா

நாவில குடியிருந்து நலலோசை தரும்
நற்கருணைத் தேவி சரஸ்வதியே
நாடி உன்பாதம் தொழுதோமம்மா
நாம் படும் துயரைத் தீருமம்மா

மகே. நிருஷன்
தரம் - 12
யாழ்; புனித சம்பத்திரிசியார் கல்லூரி

### எமக்குத் துணையம்மா

தாயே சரஸ்வதி தண்டமிழ்த் தேவி
நீயே என்றும் எமக்குத் துணையம்மா!
நாயே யனைய தமிழர் நாம் படும் துன்பம் கண்டும்
தாயே இன்னும் நீ பொறுத்திருக்கலாமோ?

த. அஜந்தகுமார்
நெல்லியடி மத்திய ம.வி.

### விரும்பும் நாயகி

வீணையுடன் வீற்றிருப்பவளே
வினைகள் யாவும தீர்ப்பவளே
வேண்டும் வரம் தந்திடுவாயே
விரும்பி நாமும் தொழுதோம்

செல்வி ச. சரணிகா
தரம் - 4
யாழ். ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

## சுக வாழ்வு

பரிசோதனைகள் மூலம் குருதியில் பிற பொருள் எதிரிகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டால் எச்.ஐ வி. தொற்று ஏற்பட்டுள்ளதென நிச்சயப்படுத்தப்படுகிறது.

(எயிட்ஸ் - வருமுன் காப்போம்.)

- தரிசனம்

# ஆணைக்குழுக்களினால் ஜனநாயகம் வளராது

# சட்டத்தால் மட்டும் அதைபாதுகாக்கவும்முடியாது

'அதிகாரம் ஆளைப் பழுதாக்கும்;
முழு அதிகாரம் முழுமையாகப் பழுதாக்கும்'
அக்ரன் பிரபு, யாப்பு வரலாற்று நிபுணர்
(1834- 1902)

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கொடுப்பார் இலானும் கெடும்
திருக்குறள் (448)

நாட்டை நிர்வாகிக்கும் அரசாங்கம், தேர்தல் காலத்தில் நாட்டின் பாராளுமன்றத்தை ஆக்கத் தெண்டித்து, தான் தொடர்ந்து பதவியிலிருக்க வழி செய்யப் பார்க்கும்;

இது முந்திய காலங்களிலும் நடந்ததனாலும், இப்போது மிகக் கூடிய அளவுக்கு நடந்து. பொது மக்கள் ஜனநாயகத்தில் மக்களால் மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தில் எள்ளவும் நம்பிக்கை வைக்காமல் செய்து விட்டது. அதனால் நாட்டின் அரசியற் கட்சிகள் எல்லாமே ஒத்து, ஐந்து சுதந்திரமாக இயங்கும் ஆணைக்குழுக்களை அமைப்பதற்குச் சம்மதித்தன. அதனால் எமது யாப்பின் 17 ம் திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுக்குமா? அரசு சட்ட விரோதமாக, தன்செல்வாக்கை உபயோகித்து, நிர்வாகம் செய்யும் அதிகாரிகளைத் தன் விருப்பப்படி தொடர்ந்து நடக்கச் செய்யுமா? ஐந்து சுதந்திரமாக இயங்கும் ஆணைக்குழுக்கள் உண்மையில் அரசின் அதிகாரக் கரங்களுக்குள சிக்கி விடாது, நேர்மையாக இயங்க முடியுமா? ஊழல் இல்லாத சுதந்திரமான தேர்தல், மந்திரிமார், நாடாளுமன்ற உறுப்பினரின் செல்வாக்கை மீறி, நீதியாகக் கடமையாற்றும் பொலிஸ் திணைக்களம், மாசு மறுவற்ற நீதிபரிபாலன அலகு- இப்படி நல்ல பிரஜைகளின் கனவில் நடமாடும் இலட்சிய அரசாங்க அமைப்பு கீழ் வானத்தில்தோன்றுகிறதா? நாலுவிஷயம் தெரிந்தவர்கள் என்னசொல்லுகிறார்கள்? இதோ கட்டுரையைப் படியுங்கள்;

தாயின் முகம் பார்த்து, பாலமுதும் பருகஆவல்கொள்கிறது சேய். பால் வரவில்லை வேறுவழியில்லையா? 'செவிலித்தாய்' ஒருத்தியை ஏற்பாடு செய்தால் என்ன என்று குழந்தையின் நலத்தில் நாட்டமுள்ளவர்கள் நினைக்கிறார்கள். அரசை ஏற்று நடத்தும் அரசியற்கட்சிதனக்கு ஏற்ற காலம் பார்த்து தேர்தல் நாளை குறிப்பிடுகிறது. தேர்தல் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. தேர்தல் முறையாக நடைபெறப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளே முறைகேடுகளைச் செய்கிறார்கள்; இதைத்தவிர்க்க 'செவிலித்தாய்' அரசாங்கம் ஒன்றை ஏற்பாடு செய்தல் நன்மை தரும்தானே. ஐந்து ஆணைக்குழுக்கள் அரசாங்கக்கட்சியின் தலையீடு இல்லாமல் தேர்தல் நடக்கச் செய்தால் 'பொலிஸ் தலையீட்டால் தேர்தல் மக்கள் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை' என்று நாளைக்குக் குற்றம் சொல்லுவோர் வாயை மூட வேண்டும் அல்லவா?

### பொதுசன அபிப்பிராயம்

இந்த எதிர்பார்ப்பு முழுவதும் சரியா? எவ்வளவுக்கு இந்த சுதந்திர ஆணைக்குழுக்கள் அரச ஊழலைத் தடுக்கும்? அவைகளை அமைப்பதிலும், அவைகளுக்குச் சலுகைகளை வழங்குவதன் மூலமும் அரசு மீண்டும் மறைமுகமாக அவற்றின் செயற்பாடுகளைத் தடுக்கலாம். தன் விருப்பப்படி திசைதிருப்பலாம் அல்லவா? இது பற்றி நற்பிரசைகள் சிந்தித்து, பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கவேண்டும்;

கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட சட்ட விரிவுரையாளர் கலாநிதி றோகன் எதிரிசிங்க கூறுகிறார், 17 ஆம் திருத்தம் பற்றி எல்லாரும் பேசுகிறார்கள். அது அரசியல் யாப்புத்திருத்தங்கள் எவ்வெவற்றை உள்ளடக்கியிருக்கும் என்று பலரும் அறியார்; 1994 முதல் 2000 வரை யாப்புச் சீர்த்திருத்தம் என்பது பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குமட்டுமே உரிய விடயம போல நடத்தப்பட்டது; பொதுமக்கள் இருளில் விடப்பட்டனர்' முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் சாம்விஜயசிங்கவின் கருத்து;

சட்டத்தால் மட்டும் காரியங்களைச் சரிப்படுத்தி விட முடியாது. உதாரணமாக, இந்த ஐந்து ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களை நியமிக்கப்போகும் ஆலோசனைச் சபையில் ஜனாதிபதி தனது பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும் என்கிறார். சபாநாயகர், எதிர்க் கட்சித்தலைவர். பிரதமர் ஆகிய மூவரும் மூன்று பேரைச்சிபார்சு செய்வர். எதிர்க்கட்சித்தலைவரும் பிரதமரும் ஆறு உறுப்பினர்களை நியமிபபர். இப்போது ஆலோசனைச் சபையில் 9 பேர் இருக்கின்றனர். ஒற்றைப்பட எண் இருக்கும் போது ஒரு தீர்மானம் எடுக்க பெரும்பான்மை முடிவு ஏற்படவசதி இருக்கும் ஜனாதிபதி மேலும் ஒரு பிரதிநிதியை அமர்த்துவதானால் இரட்டைப்படஎண் வரும் பெரும்பான்மை முடிவு ஏற்படலாம். ஆனால் ஜனாதிபதியே நியமிக்கும் அதிகாரியாயிருந்து கொண்டு, தன் கருத்துகளை வற்புறுத்த மேலும் ஒருவரை நியமிக்க விரும்புவது ஏன்? இதனால் சுதந்திரமான ஆணைக்குழுக்கள் உண்மையில் சுதந்திரமாக இயங்கமாட்டா; அங்கத்தவர்கள் சில தொடர்புகள்பற்றித்தம்முள் பிரிந்து தான் செயற்படுவார்கள் என்பது விளங்கும்.

### ஊடக ஆணைக் குழு

இன்று அரசாங்கம் ஊடக ஆணைக்குழுவை நியமிக்கத் தயங்குகிறது. அதற்குப்பயப்படுகிறது. ஒருவர் சொல்வதும், பிறகு சொல்லவில்லை என்று மறுப்பதையும் நாம் இன்றுகாண்கிறோம். அரசாங்கம் ஊடகத்தைத்தனி யுடைமையாகப் பயன்படுத்தும் போது, அது அரசாங்கத்தின் இலாபத்துக்காகவே செயற்படும்;

பூரணமான குறை என்று ஒன்று இல்லை. நடுவு நிலைமை, நேர்மையோடு செயற்படுவதுஎன்றபண்புமக்களிடையே வளர்க்கப்பட வேண்டும், ஆசிரியர்களும், பெற்றோரும் இதில் பெரும் பங்கை வகிக்கிறார்கள். அவர்களால்தான் சுதந்திரமான, அநீதிக்குத்தலைவணங்காத சமூகம் உருவாகமுடியும்;

## அவைமணி

### பேராசிரியர்பேட்றம் பஸ்தியாம் பிள்ளை

முனைவனநாள 'ஒமபுண்ட்ஸ்டகன்' கூறுகிறார்இன்று அரசாங்கத்தின்நிர்வாகத்தைநடத்தும் பொதுச் சேவை கடுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. எந்தக்கட்சி அரசாங்கத்தில் இருக்கிறதோ, அதன் நல்லெண்ணத்திலேயே உத்தியோகத்தர் தங்கியிருக்கிறார்கள்.

பொதுச்சேவை ஆணைக்குழு ஒன்று, நாடுசுதந்திரம் பெற்ற பின், இயங்கியது. அதன் தலைவரின் தனித்து வாழும் சமநிலையும் அதற்கு நல்லபெயரைத்தந்தன. 1972 க்குப் பிறகு இந்நிலை மாறியது. அக்குழு அரசியல் மயமாக்கப்பட்டது, இக்குழுவில் இருப்போர் அரசியற கட்சி சார்ந்தவர்களாயிருக்கக்கூடாது. அவர்கள் சேவையாற்றிய காலத்தில் நேர்மை தவறாதவர்கள் என்று நற்

... 2 ஆம் பக்கம் பார்க்க

## இராசி பலன்

23-10-2001
ஐப்பசி 06, செவ்வாய்
சப்தமி மு. இ. 10 33 வரை
பூராடம் பி. ப. 3.48 வரை
இராகுகாலம் 3.02-4 32
நல்லநேரம் 10 32-12.02
சரஸ்வதி பூஜை ஆரம்பம்

**மேடம்**
பிரயாணம், அதிகபிரயாசை, வீண்பயம், முயற்சி தாமதம்.

**இடபம்**
எதிர்பாராதமனஸ்தாபம், உடல்நலக்குறைவு, தொழில் நன்மை, தனவரவு;

**மிதுனம்**
சுவாரஸ்யம், பிரயாணம், நல்லகாரியம், பொருள் சேர்க்கை;

**கடகம்**
பகைவரால் நன்மை, ஆரோக்கியம், தொழில் விருத்தி, காரியநன்மை,

**சிங்கம்**
பதட்டம், தனவரவு, உடல்வியாதி, காரியதாமதம்.

**கன்னி**
கல்விசசிறப்பு, பயந்த சுபாவம், துயரம், முயற்சி தாமதம்;

**துலாம்**
சகோதரர் உதவி, புதிய பொருளசேர்க்கை, சுவாரஸ்யம், முயற்சி கைகூடும்,

**விருச்சிகம்**
போசன சுகம், நிம்மதிக் குறைவு, காரியதாமதம், திடீர்நன்மை;

**தனுசு**
வாகனசுகம், சென்றஇடத்தில் செல்வாக்கு, நல்ல முயற்சி, குடும்பநன்மை,

**மகரம்**
துயரம், காரிய இழப்பு, திடீர் பயணம், சுபசெலவு,

**கும்பம்**
தனலாபம், குடும்ப நன்மை, காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு,

**மீனம்**
அதிகாரம், சுபநிகழ்வு, உற்சாகம், கீழ்ப்படிவு,

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# அனைத்துலக ரீதியாக தமிழ் மக்கள்

# எமது கூட்டமைப்பை ஆதரிக்கிறார்கள்

## தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்புப் பற்றி மாவை. சேனாதிராசா உரை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ் சுரேஸ் அணி இவர்கள் ஒரே அணியில் நிற்பதற்குரிய நியாயங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்று போராடுகின்றவர்கள் கருதி இருப்பதனால்எந்த விதமான ஐயத்திற்கும் இடமின்றி இந்த அணியை அனைத்துலக ரீதியாக தமிழ் மக்கள் இன்று ஆதரிக்கிறார்கள். வடக்கு - கிழக்கு மட்டுமன்றி நாடு பூராகவும் ஒரு வித மக்கள் எழுச்சி ஏற்பட்டிருக்கிறது; இந்த எழுச்சி தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஓரணியில் நிற்க வேண்டிய தேவையை வலியுறுத்தி இருக்கிறது;

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுத் தேர்தல் தொடர்பான கூட்டம் கட்சி அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றபோது அங்கு உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா இவ்வாறு கூறினார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவருமான வீ. ஆனந்த சங்கரி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுயில்;

தமிழ்தேசிய இனத்தின் உரிமைக்கானபோராட்டத்திற்கு வலுச் சேர்ப்பதற்காகவும் பேரினவாத சக்திகளுக்கு தகுந்த பாடம் புகட்டுவதற்குமாகவே நான்கு தமிழ்க் கட்சிகளும் கூட்டுச் சேர்ந்துள்ளன. இதனால் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னிஉட்பட சகல மாவட்டங்களிலும் நாம் சிறந்த வெற்றியை நிலைநாட்டுவோம்;

தந்தை செல்வாவின் வழியில் சென்றால் தான் தமிழ் இனத்தை ஒன்று படுத்த முடியும். தினமும நாம் செத்துக் கொண்டிருப்பதை விட ஒரு இலக்கை, அல்லது இலட்சியத்தை நோக்கி செல்வா வழியில் மீண்டும் எம்மை அர்ப்பணிக்க வேண்டும். அதற்காக இக் கூட்டமைப்பை பலமுள்ளதாக மாற்றி அமைக்க வேண்டும். ஜனநாயக ரீதியாக வழங்கப்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்துவோம் என்றார்;

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்த சங்கரி நாம் ஒன்றுபட வேண்டிய காலம் வந்துவிட்டது. இந்தத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்துப் போட்டியிட்டால் பல ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். ஆனால் தமிழர் ஐக்கியத்தை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டுவதையே நாம் முதன்மையாகக் கொள்கிறோம். எம்மை எவரும் விலைக்கு வாங்க முடியாது. எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக அவற்றுக்கு முண்டு கொடுக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. எமது இலட்சியம் இன விடுதலையே அந்த உறுதியான நிலைப்பாட்டை எடுப்பதற்கு இக் கூட்டு அவசியம்,

உடனடி யுத்த நிறுத்தம் விடுதலைப் புலிகளுடன்பேச்சு போன்ற முதன்மையானபிரச்சினைகளில் இந்த கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் ஒன்றுபட்டுள்ளன என்றார்,

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, யாழ். நகர முதல்வர் இ. ரவிராஜ் ஆகியோரும் உரையாற்றினர். ஆதரவாளர்கள் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(எ-10,19,106)

## சிறுவர்முதியோர் தின விழா

[யாழ்ப்பாணம]

சர்வதேச சிறுவர் - முதியோர் தின விழா இன்று நல்லூர் பிரதேச செயலகத்தில் கொண்டாடப்படவுளளது,

பிரதேச சொலர் நா வேதநாயகன் தலைமையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் மு. ப. 10. 00 மணிக்கு ஆரம்பமாக உள்ள மேற்படி நிகழ்வில், நல்லூர் கோட்ட உதவிகல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். காங்கேயன், சிறுவர்நன்னடத்தைஅதிகாரி திருமதி. கே. சிவராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொளளவுள்ளனர்;

[உ-15]

## சைக்கிள் களவு

(இருபாலை)

தனியார் கல்வி நிறுவனம் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த பெண்களுக்கான சைக்கிள் மாயமாய் மறைந்த சம்பவம் கடந்த ஞாயிறன்று இடம் பெற்றுள்ளது.

யாழ்:நகர் விக்னா கல்வி நிறுவனத்தின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த. அங்கு கல்வி பயிலும் மாணவியுடைய சைக்கிளே இவ்வாறுகளவாடப்பட்டுள்ளது,

(உ 221)

## இன்று ஒரு தகவல்

# இடி இடித்தபின் மழை

அறிஞர்கள் பலரைத் தந்து பெருமைபெற்ற நகரம் ஏதென்ஸ். இந் நகரில்தான் கி.மு 469 இல் பேரறிஞர் சோக்கிரட்டிஸ் பிறந்தார். அக்கால முறைப்படி இராணுவத்தில் சேர்ந்து போரில் ஈடுபட்டார். ஆனால் அவருக்குத் தாய்நாட்டில் அவ்வளவு அக்கறை இருக்கவில்லை. இல்லற வாழ்வும் இன்பமாகத் தெரியவில்லை. மனிதனுடைய நடத்தை, இயல்பு பற்றியே சிந்திக்கத் தொடங்கினார். மக்கள் அறிவுரீதியில் வளர வேண்டுமென்று விரும்பினார்.

நிதி சட்டம் என்பவற்றை மதித்து நடந்தார் ஆன்மா அழியாதது என்று நம்பினார். தனது சிந்தனைக் கருத்துக்களைத் துணிவுடன் கூறினார். அவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர்கள் அவரின் பின்சென்றனர். தன்னைச் சுற்றிவரும் நண்பர்களுக்குத் தனது சிந்தனையின் விளக்கத்தை எடுத்துரைப்பதில் நீண்ட நேரத்தைச் செலவிடுவார்.

காலில் செருப்பு இருக்காது மேலாடை இருக்காது பைத்தியக்காரன் மாதிரி போகிற இடத்தில் அப்படியே சிந்தனையில் மூழ்கிவிடுவார். தனது கருத்துக்கள் எதனையும் எழுதி வைக்கவில்லை. ஆனால், இவரது சிந்தனைகளைப் பிற்காத்தில் உலகிற்கு அளித்தவர்; இவரது மாணவரான பிளேட்டோ பின்னாளில் தோன்றிய அறிஞர்களாக கிரிட்டோ, பிளேட்டோ, கௌபன், பெரிக்கிறிஸ், யுரிப்பிடீஸ் போன்றோர்களெல்லாம் இவரது மாணவர்களாவர்;

சோக்கிரட்டீசின் கருத்துக்களை அந்நாளில் வாழ்ந்த பெரும்பாலானவர்கள் இளைஞர்களைக் கெடுக்கிறான் என்றுகூறி நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள். ஆனால் தன்மீது சுமத்தப்பட்ட குற்றத்தை அவர் இறுதிவரை ஒப்புக் கொள்ளாததால் மரணதண்டனை விதிக்கப்பட்டது. அதையும் சந்தோசமாகவே ஏற்றுக்கொண்டார். அவரது நண்பர்களே நாட்டைவிட்டுத் தப்பிச் செல்லுமாறு வழிவகுத்தனர். அவரோ மறுத்துவிட்டார். அக்கால வழக்கப்படி அவருக்கு விஷம் கொடுக்கப்பட்டது. சிரித்துக்கொண்டே அதைச் சாப்பிட்டார். நண்பர்கள் அழும்போது அவர் களைத் தேற்றினார். தனது குறிக்கோளில் இறுதிவரை உறுதியாகவே நின்றார்;

சிந்தனையின் தந்தையான சோக்கிரட்டிஸை அவரது மனைவிபுரிந்து கொள்ளாமல் கொடுமை செய்தாள். அதற்காக மனைவியை விட்டுப்பிரிந்ததோ மனைவியுடன் சண்டை பிடித்ததோ இல்லை. எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டார். ஒரு நாள் வீட்டுக்கு வெளியே நண்பர் ஒருவருடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். மனைவி உள்ளே வரும்படி அழைத்ததை செவிமடுக்காது இருந்தார். பின் மனைவி சத்தமாக ஏசினாள். அதையும் கண்டுகொள்ளவில்லை. அதன்பின் தண்ணீரைக் கொண்டு வந்து அவர் மீது கொட்டினாள்; அப்போது சோக்கிரட்டீஸ் என்ன சொன்னார்தெரியுமா? இவ்வளவு நேரமும் இடி இடித்தது இப்போது மழை பெய்கிறது அவ்வளவுதான் என்றார் சிரித்துக்கொண்டே. □

சுவர்ணா
(சாவகச்சேரி)

# கூடைப் பந்தாட்டத்தில் சாம்பியனான அணிகள்

(வல்வெட்டித்துறை)

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வந்த 17வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ் மத்திய கல்லூரி59 புள்ளிகளைப் பெற்று சாம்பியன் ஆனது: எதிராக விளையாடிய சென் ஜோன்ஸ் கல்லூரி 32புள்ளிகளைப் பெற்றது.

பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி 24புள்ளிகளைப் பெற்று சாம்பியன் ஆனது. எதிர்த்து விளையாடிய கன்னியர் மடம் 06புள்ளிகளைப் பெற்றது.

ஆண்களுக்கானபோட்டியை உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.அருணகிரிராஜா ஆரம்பித்து வைத்தார் பெண்களுக்கான போட்டியை கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் பி.கமலநாதன் ஆரம்பித்து வைத்தார். (எ-217)

# தேர்தல் -பிரசாரங்களுக்காக பணத்தை வீணாக்கோம்

## ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி இடம் பெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு சுவரொட்டிகள் துண்டுபபிரசுரங்கள், வர்ணப் போஸ்ரர்கள் மற்றும் பிரசாரங்களுக்கு பயன்படுத்தும் பணததை சமூக சேவைகளுக்கு பயன்படுத்தப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்இரம சிங்க தெரிவிததுள்ளார்.

இம் முறை உண்மையை உரைக்கும் மற்றும், நாட்டின் விடுதலைக்காக செயற்படும் ஒரே ஒரு கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியே வெல்லும் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல, எனது கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் உண்டு;

எனவே எமது கட்சியின் வெற்றிக்காக நாம் பணத்தை வீணாக்க விரும்பவில்லை என ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிததுள்ளார், (செ-7)

# வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் கணேசா சனசமூக நிலையத்தின்வாணிவிழா நாளைபுதன் கிழமை பி.ப 3 00 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ-2)

★ ★ ★

(கொழும்புத்துறை)

யாழ், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வாணிவிழா இன்று பி.ப,2.00மணிக்கு சங்கக்கேட்போர் கூட்டத்தில் நடைபெறவுளளது, (உ-233)

# அரச ஊடகங்கள் தேர்தலில் ஆணையாளரின் வழிகாட்டலை ஏற்கத் தவறின் பொறுப்புகள் பறிமுதலாகும்

(கொழும்பு)

தேர்தல் பிரசாரங்களில் அரச ஊடகங்களான ரூபவாஹினியும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் தேர்தல் ஆணையாளரின் வழிகாட்டல்களை மதித்து சகல கட்சிகள் மற்றும்சுயேட்சைக்குழுக்களுக்கும் சமமான வாய்ப்பை அளிக்க வேண்டும்,

தவறினால் தேர்தல் தொடர்பான செய்திகளை வெளியிடும் பொறுப்புக்களை அப்படியே தேர்தல் ஆணையாளர் ஏற்றுக்கொள்ள முடியும் என்று சட்டமா அதிபர் கமல சபேசன் தேர்தல் ஆணையாளருக்கு வெள்ளிக்கிழமை கடிதம் மூலம்அறிவித்துள்ளதாக சண்டேரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அரசியற்கட்சிகள், சிவில் அமைப்புக்கள், நலன் விரும்பிகள் பலரும் இதுபற்றி ஆர்வம் காட்டியதைத் தொடர்ந்து தேர்தல் ஆணையாளர் 17வது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் தான் செயற்படுவது பற்றிய ஆலோசனையை சட்டமா அதிபரிடமிருந்து கோரியிருந்தார். இதற்குப்பதிலளிக்கையில் சட்டமா அதிபர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் ஆணையாளருக்கு, அரச மற்றும் தனியார் ஊடகங்களுக்கு தேர்தல் பிரசாரம் பற்றிய வழிகாட்டல்களை வழங்கல் அரச ஊடகங்கள் அது தொடர்பாக அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்தால் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்தல், வாகனங்கள் மற்றும் சொத்துகளை தேர்தல் தொடர்பான பணிகளுக்கு கையளிக்கக் கூடாதென்று திணைக்கள தலைவர்களுக்கு அச்சுறுத்தல் தேர்தல் தினத்தன்று சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கு வேண்டிய பொலிசாரை பொலிஸ்மா அதிபரிடமிருந்து கோரிப் பெறுதல் ஆகிய பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை பொலிஸ்மா அதிபரே இந்த அதிகாரங்களை கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா, நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி அ. சண்முகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக கல்வித்திணைக்களப் பொறியியலாளர் ஜி சிவபாலன் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

# புதிய தபால் பெட்டி

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் ஆயர்க்கடவை சித்திவிநாயகர்ஆலயத்திற்கு முன்னால் நீண்ட காலத்திற்கு பின்னர் புதிதாக தபால் பெட்டிஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முன்னர் இவ்விடத்தில் இருந்த தபால் பெட்டிசிதைவடைந்து போயிருந்தமையால் இத் தபால் பெட்டி புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. (செ-2)

# மாடுகளுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் மழைகாலத்தில் மாடுகளுக்கு ஏற்படும் தொண்டை நோய்க்கான தடுப்பூசிபோடப்படும்

இன்று செவ்வாய்க்கிழமை ஜே 278புத்தூர் கிழக்கு பிரிவிற்கு குருபரன் சன சமூக நிலையத்தில் தடுப்பூசி போடப்படும்; (செ)

# சிவாஜிக்கு அஞ்சலி நிகழ்வு

(கொழும்பு)

மறைந்த தென்னிந்திய நடிகர் சிவாஜி கணேசனிற்கு இலங்கை வாழ் ரசிகர்களின் ஏற்பாட்டில்எதிர்வரும்27ஆம் திகதி கொழும்பு புதிய கதிரேசன்மண்டபத்தில் நித்திய நாயகனுக்கு'நினைவஞ்சலி புகழஞ்சலி,என்ற தலைபபில் அஞ்சலி நிகழ்வு நடைபெற உளளது. இந்நிகழ்ச்சியில் சிவாஜி கணேசனின் பிள்ளைகளும் மற்றும பிரபல தென்னிந்திய நடிகர்களும் கலந்து கொள்வார்கள்என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-2)

# தேர்தல் தொடர்பான வன்முறைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் வன்முறைகளும் அதிகரித்துள்ளதாக தேர்தல் வன்முறைகளை விசாரணை செய்யும் கொழும்பு திணைக்களம் அறிவித்துளளது.

வேட்பு மனுத்தாக்கல் கடந்த சனி முதல் ஆரம்பமானதையடுத்துஇதுவரைமூன்று முறைப்பாடுகள தமக்கு கிடைத்துள்ளதாகவும், தம்புள்ள, கேகாலை, புத்தளம் ஆகிய பகுதிகளிலேயே இவ் வன்முறைகள் இடம் பெற்றதாகவும் மேற்படி திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (உ-4)

# சட்டவிரோத மதுபான விற்பனை நிலையங்களை தேடிபொலிஸார் வேட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அனுமதி பெறாமல் இயங்கும் மதுபான விற்பனை நிலையங்களை கண்டு பிடிக்கும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்;

இந்த வகையில் குடாநாட்டில் இயங்கும் மதுபான விற்பனை நிலையங்களின் அனுமதிப் பத்திரங்களைப் பரீட்சித்து அனுமதி பெறாத விற்பனை நிலைய உரிமையாளர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுகின்றனர், (உ10)

# திஸநாயக்கா மீதான லஞ்ச ஊழல் விசாரணை முழு வீச்சில் முன்னெடுப்பு

(கொழும்பு)

பொ.ஐ முன்னணியில் முக்கியஅமைச்சராகவிருந்து பின்னர் அதிருப்தியாளராகி, இப்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திர தேசபக்த முன்னணியின் தலைவராகியுள்ள எஸ் பி. திஸநாயக்க மீது லஞ்சஊழல் தொடர்பான விசாரணைகள் முடுக்கி விடப்படவுளளதாக ஊடகங்கள் தெரிவிககின்றன.

இவர் தொடர்பான ஆவணங்கள் கொண்ட கோவைசில 2001 ஒக்டோபர் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிககு லஞ்ச ஆணையாளரின் அலுவலகத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும,இதனை அங்கு பணியாற்றும் உயர் அதிகாரியொருவரே செய்துள்ளதாகவும செய்திகள் வெளியாகியுள்ளன

ஆனால், அவ்வதிகாரிதான் கோவைகளை எடுத்தது உண்மையேயென்றும், அவை தனது தனிப்பட்ட கோவைகளென்றும் தெரிவித்ததுடன், குறித்த கோவைகளை தான் எடுத்துச் சென்று ஜனாதிபதியிடம் கையளித்ததாக கூறப்படுவது அப்பட்டமான பொய் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி குமாரதுங்கவின் நெருங்கிய நண்பர் ரெனிபீரிஸ் பெற்ற கடனுக்காக இலங்கை வங்கிக்கு செலுததவேண்டிய 15 மில்லியன் ரூபா பறிமுதலிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இவ்வாரம் லஞ்ச ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்படவுளளதாக சண்டே லீடர் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுளளது. (உ)

# வட-கிழக்கு முழுமையும் புளொட் போட்டியிடும்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடவுள்ளதாக புளொட் அமைப்பின தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் சேர்வதற்கான பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் அது தோல்வியடையும் பட்சத்தில் வடக்குக்கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் தனித்து போட்டியிடுவோமெனவும் அவர் மேலும் தெரிவித்தார், (உ-5)

## சிந்தனைக்கு விருந்து

### எள்ளாது எமக்கு ஈ

செல்வம் இருந்தென்ன? சீர்கள் நிறைந்தென்ன?
கல்வியிலா வாழ்கை கடையேயாம- கல்வியினை
அள்ளித் தருபவளே! ஆளும் கலைக்கரசி
எள்ளா தவை எமக்கு ஈ

'பழையவன்'

## தலிபான் அமைப்பின் தலைவர்
# முல்லா முஹமட்டின் 10 வயது மகன்
# அமெ. விமானத் தாக்குதலில் பலி

(காபூல்)
தலிபான் அமைப்பின் தலைவர் முல்லாமுஹமட்டின் 10 வயது மகன் அமெரிக்கத் தாக்குதலுக்கு பலியாகியுள்ளதாக வெளியான செய்தியை தொடர்ந்து ஆப்கானின் இராணுவ, மற்றும் ஆயுதப் பலங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் இரவு அமெரிக்க விமானம் ஆப்கான் மீது கடுமையாக தாக்குதலை மேற்கொண்ட வேளை, அத்தாக்குதலில் படுகாயமடைந்த முஹமட்டின் மகன் நேற்று அதிகாலை பலியானதாக தெரியவருகிறது.

இதனால் ஆத்திரம் கொண்ட ஆப்கானின் படைகள் முன்னர் இருந்ததைவிட தம்மைப் பலப்படுத்திக் கொண்டிருப்பதாகவும் அமெரிக்கா மீது கடும் எதிர்த்தாக்குதல் நடத்த ஆயத்தமாகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-7)

## காஷ்மீர் மீதான
# மறைமுக போரை ஒடுக்கத் திட்டம்

(புதுடில்லி)
ஜம்மு காஷ்மீரில் பாகிஸ்தான் தொடுத்துள்ள மறைமுகமான போரை ஒடுக்க திட்டமொன்றை அரசு செய்து வருவதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பொனாண்டஸ் தெரிவித்தார்.

இந்தியாவின் வடபகுதியில் குறிப்பாக பாரமுல்லாகுப் பாறா மற்றும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்ற பெர்னாண்டஸ் மூத்த இராஜாங்க அதிகாரிகளுடன் பாதுகாப்பு நிலைகள்பற்றி கலந்துரையாடுகையில் திட்டத்திற்கான யோசனைகள் விவாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, தகுந்த பதிலடி பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (து)

# தமிழ்நாடு மாநகராட்சித் தேர்தல்
# 3 இடங்களில் அ.தி.மு.க. வெற்றி

(சென்னை)
தமிழ்நாடு 6 மாநகர ஆட்சித் தேர்தல் முடிவுகளும் நேற்று வெளிவந்துள்ளன.

கோவை, சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகர சபைகளை அ.இ.அ.தி.மு.க. பிரதிநிதிகளும் மதுரை, சென்னை மாநகர சபைகளை தி.மு.க. பிரதிநிதிகளும், திருச்சி மாநகரசபையை த.மா.கா. பிரதிநிதியும் கைப்பற்றியுள்ளனர்.

கோவையில் - மலரவனும் சேலத்தில் - சுரேஸ்குமாரும், திருநெல்வேலியில் - திருமதி ஜெயராணியும் மாநகர முதல்வர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மதுரையில் இராமச்சந்திரனும் சென்னையில் மு.க. ஸ்ராலினும், மாநகர முதல்வர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருச்சி மாநகரசபை முதல்வராக திருமதி சாருபாலா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். (து)

# பாகிஸ்தான் எல்லையில் 10 ஆயிரம் அகதிகள்

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தான் எல்லையில் 10 ஆயிரம் அகதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா ஸ்தாபனம் அறிவித்துளளது.

தலிபானில் அமெரிக்கப் படைகளின் வான் மற்றும் தரை வழித்தாக்குதல்கள் உக்கிரம் அடைந்துள்ளதை யடுத்து ஆப்கானிஸ்தான் மக்கள் பாகிஸ்தானுக்கு தப்பிச் செல்ல முற்படுகையில்தடுத்து வைக்கப்பட்டார்கள்.

ஆப்கான் அகதிகள் உட்புகாதபடி பாகிஸ்தான் வழிகளை திடீரெனத் தடை செய்துள்ளது.

தடுத்துவைக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் அகதிகளையும் ஐ நா நிறுவனம்பாதுகாப்புக் கொடுத்து வருகிறது. [து]

# இஸ்ரேலின் தாக்குதலுக்கு ரொனிபிளேயர் கண்டனம்

(ஜெருசலேம்)
பலஸ்தீனப் பகுதியாகிய பெதிலகேம் நகருக்குள் இஸ்ரேலிய கவசவாகனங்கள் புகுந்து மிலேச்சத்தனமாக தாக்குதல் நடத்தியதை பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளெயர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

கடந்த ஒருவருடகாலமாக மத்திய கிழக்கில் இடம்பெற்றுவரும் போரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலே மிகக் கொடூரமானது என்று சர்வதேசரீதியில் வர்ணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

யுத்தம் நடத்துவது இருசாராராகிய ஆயுத பாணிகளே. ஆனாலும் இஸ்ரேலின் இத்தாக்குதல் பலஸ்தீன அப்பாவி மக்களை அநியாயமாக பலியாக்கியுள்ளது என்றும் பிரிட்டன் பிரதமர் தெரிவித்துள்ளார். (உ-7)

## உலக தரிசனம்

## ஜூனியர் ஹாக்கியில் இந்தியா சம்பியன்

(புதுடில்லி)
ஜூனியர் உலகக் கோப்பை ஹாக்கி சம்பியன் பட்டத்தை இந்தியா வென்றுள்ளது. அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இறுதிப் போட்டியில் இந்திய அணியும் ஆர்ஜென்ரீனா அணியும் மோதின. இதில் இந்தியா 6:1 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியுள்ளது.

இந்தியா சம்பியனாகியமை இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-2)

# புனித மாதத்தில் மனித கொலை வேண்டாம்

(ஜகார்த்தா)
புனித ரம்ழான் காலத்தில் அமெரிக்கா ஆப்கான் மீது தாக்குதலைத் தொடருமானால் தாம் அதனை எதிர்க்கப்போவதாக மலேசியாவும் இந்தோனேஷியாவும் தெரிவித்துள்ளன.

இந்தோனேஷியாவும் மலேசியாவும் அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ள போதும் புனித மாதத்தில் சண்டையிடுவதையும் மனிதர்கள் கொல்லப்படுவதையும் எதிர்ப்பதுடன் இஸ்லாமிய உலகின் பலத்தஎதிர்ப்புகளுக்கும் உள்ளாக நேரிடும் என்றும் தெரிவித்துள்ளன.

இதே வேளை பின்லேடனுக்கு எதிராக அமெரிக்கா ஆப்கானில் தொடுத்துள்ள போரையும் வன்மையாகக் கண்டித்திருக்கின்றன. (து)

# தேடிச் சென்று தாக்கும் எண்ணம் கிடையாது

(ஹிமாலயா)
பயங்கரவாதிகளைத்தேடிச் சென்றுதாக்குவது, சர்வதேச சட்டத்தில் சொல்லப்பட்டாலும் நாங்கள் அதை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று இந்திய உள்துறை அமைச்சர் எல்கே அத்வானி தெரிவித்தார்.

ஹிமாலயப் பிரதேசத்தில் நீர்மின் நிலையத்தைத் திறந்து வைத்த பின் செய்தியாளர் மத்தியில்பேசுகையில், ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவிவந்தால்பாகிஸ்தான் பயங்கரமான பின்விளைவுகளைஎதிர் நோக்க வேண்டி வரும் என்று எச்சரித்துள்ளார்.

எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு அப்பாலுள்ள பயங்கரவாதிகளின் முகாங்களை அழிக்கும் திட்டம் ஒன்றும் இப்போதைக்கு இந்தியாவிற்கு இல்லையென்றும் ஆனால் தருணம் வரும் போது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எல்.கே. அத்வானி தெரிவித்தார். (து)

# கொக்கோகோலாகம்பனி குண்டுவைத்து தகர்ப்பு

(குண்டூர்)
ஆந்திரமாநிலகுண்டூர் மாவட்டத்திலுள்ள கொக்கோ கோலா தொழிற்சாலை குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நிறுவனமான கொக்கோகோலா ஸ்தாபனம் தீவிரவாதிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

முக்கிய கொதிகலன் பகுதி மற்றும் மின்மாற்றி என்பன குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன எனினும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

கொக்கோகோலா தொழிற்சாலையை நோக்கி அதிகாலையில் ஒரு ஜிப்பில் சென்ற தீவிரவாதிகள் குண்டு வீசியதாகவும்இச்சம்பவத்தின் போது காவலாளிகளை மடக்கி ஒருஅறையில் பூட்டியதாகவும் தெரியவந்துள்ளது.

# பா. ஜ. க வுக்கும், தி. மு. க. வுக்கும் கருத்து வேறுபாடு

(சென்னை)
பாரதிய ஜனதாக்கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குமிடையே விரிசல் ஏற்பட்டிருப்பதாக அறிய முடிகிறது.

அ.இ.அ.தி.மு.க. மீது மு.கருணாநிதி சாட்டிய குற்றங்கள் குறித்து பாரதியா ஜனதாக்கட்சி பாராமுகமாக இருப்பதாக சில நிகழ்ச்சிகளில் தனது அதிருப்தியை அவர் காட்டி வருகிறார்.

குறிப்பாக, மத்திய அமைச்சர்கள் தமிழ் நாட்டிற்கு வருகை தரும் போது கருணாநிதி அவர்களைச் சந்திப்பதைத் தவிர்த்து வருகிறார்.

அண்மையில் பாரதியா ஜனதாக்கட்சியின் தலைவர் ஜனாக்கிருஷ்ணமூர்த்தியின் வீட்டுத் திருமணத்திற்கு வந்திருந்த பிரதமர்வாஜ்பாயைச் சந்திப்பதை மு. கருணாநிதி தவிர்த்துக் கொண்டார்.

இதேவேளை சென்னையில் பத்திரிகையாளரைச் சந்தித்த வாஜ்பாயிடம், தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கைது செய்யப்பட்ட போது, கொடுக்கப்பட்ட புகார் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்கப்பட்டபொழுது புகார் உண்மையாக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்தக் கருத்தை அறிந்து விசனம் தெரிவித்த கருணாநிதி இனிமேல் மத்திய அரசிடம் புகார் தெரிவிக்கப் போவதில்லை யென்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாரதிய ஜனதாவிற்கும் தி.மு.க விற்குமிடையேயான விரிசல் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை அடுத்து விஸ்வரூபம் எடுக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# இறுதிமூச்சுவரை கல்விவளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் உழைத்தவர்
## பேராசிரியருக்கு அஞ்சலி உரை

(யாழ்ப்பாணம்)
பேராசிரியர் பாலச்சந்திரன் இறுதி மூச்சு வரை கல்வி முன்னேற்றத்துக்காகவும் தமிழ் வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்தவர் அவரின் இழப்பு யாழ்ப்பாண கல்விச் சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

மறைந்த பேராசிரியர் செ. பாலச்சந்திரனின் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ. குமாரவடிவேல் தலைமையில் நடைபெற்ற போது அஞ்சலி உரை நிகழ்த்திய புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் இவ்வாறு கூறினார்.

பேராசிரியரின் பூதவுடல் அன்னாரின் கந்தர் மடம் இல்லத்திலிருந்து பலாலி வீதிவழியாக பாண்ட் வாத்திய அணியுடன் நண்பகல் 12.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்திற்கு எடுத்து வரப்பட்டது.

பல்கலைக் கழகத்தில் கறுப்புக் கொடிகள், வாழை தோரணங்கள் கட்டப்பட்டு சோக கீதம் இசைக்கப்பட்டது. பூதவுடல் தாங்கிய பேழை பல்கலை சமூகத்தினரால் பொறுப்பேற்கப்பட்டு அஞ்சலிக்காக கைலாசபதி கலையரங்கில் வைக்கப்பட்டு 59 தீபங்கள் ஏற்றப்பட்டன.

அஞ்சலி உரையாற்றிய பேராசிரியர் சிவசந்திரன் தொடர்ந்து பேசுகையில் பேராசிரியர் அவர்கள் புவியியல் துறையின் சிறப்புக்கும் பாட விதானங்களை ஒழுங்கு படுத்துவதிலும் ஆற்றலுடன் செயற்பட்டார். காலநிலையியலில் துறை தோய்ந்த அவர் தமிழ் பிரதேச வளங்களை ஆய்வு செய்தார் என்றார்.

பதில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் அஞ்சலியுரை நிகழ்த்துகையில்;

பல்கலை கல்விச் சீர்திருத்தங்களுக்கு பேராசிரியர் அவர்கள் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டார். தீர்க்க தரிசனத்துடன் திட்டங்களை வகுத்த அவரின் இழப்புஎமது பிரதேசத்திற்கு பேரிழப்பாகும்.

வணிகத் துறைத்தலைவர் க. தேவராஜா அஞ்சலியுரையில்;

மறைந்த பேராசிரியர் தனியே கலைப்பீடத்திற்கு மட்டுமன்றி பல்கலையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர் என்று குறிப்பிட்டார்.

அஞ்சலிப்பாவை கலாநிதி என். சண்முகலிங்கன் வழங்கினார். நா. வி. மு. நவரத்தினமும் இராமநாதன் நுண்கலைப்பீட மாணவிகளும் கீதாஞ்சலி வழங்கினர்.

பேராசிரியர் சிறுக சிற்றம்பலம், விவசாய பீடாதிபதி இராஜதுரை, உட்பட பலர் அஞ்சலி யுரை நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் கல்விச்சமூகத்தினர் பலரும் கலந்து கொண்டு மறைந்த பேராசிரியருக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். (எ106)

பணியுமாம் என்றும் பெருமை
சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து
குறள்

## வலம்புரி

### அஞ்சவைக்கும் துண்டுப்பிரசுரம்

ஈழத் தமிழ் மன்னர்கள் மாண்டு பலகாலம் ஆகிவிட்டது. அவர்களின் பெயரால் அரண்மனைகளோ கோட்டைகளோ இல்லாது போனாலும் அவர்களின் பெயரில் துண்டுப்பிரசுரங்களாவது வெளிவருகிறது.

முன்பு நம்மன்னர்களின் முரசின் முழக்கம் வேற்று படைகளை நடுநடுங்கச் செய்ததுபோல் இப்போது அவர்களின் பெயரில்வெளிவருகின்றதுண்டுப்பிரசுரங்கள் நம் தமிழ் அரசியல் தலைவர்களைக் கிலிகொள்ளச் செய்கிறது.

கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்னர் சங்கிலியன் படையின் பெயரில் வெளியாகிய துண்டுப்பிரசுரத்தால் சிலருக்குச் சன்னிகண்டது. இப்போது பண்டாரவன்னியன் எல்லாளன் படைகளின்பெயரிலும் துண்டுப் பிரசுரங்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, வன்னியிலும் வெளியாகிறது பழம்பெரும் தமிழ் மன்னர்களின் நாமத்தில் வெளியிடப்படும் துண்டுப்பிரசுரத்தின் உரிமை யாருடையதென உறுதிப்படுத்த முடியாது போனாலும் அத்துண்டுப் பிரசுரங்களால் உறக்கம் மறந்தவர்கள் பலர்.

யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பது போல் சங்கிலியன், எல்லாளன், பண்டாரவன்னியன் போன்ற மன்னர்கள் உயிரோடு இருந்த போதிலும் போலி வேசம் போட்டவர்கள்அஞ்சினர். அம்மன்னர்கள் இறந்துபல ஆண்டுகள் கடந்த பின்பும் அவர்களின் பெயரிலான துண்டுப்பிரசுரம் சிந்தை கலக்குவதாகவே உள்ளது.

தேர்தல்சூடுபிடித்துள்ள நேரத்தில்துண்டுப்பிரசுரங்களின் வெளிவருகையும் அதிகரிக்கும்.

அதேவேளை இம்முறை பொதுத்தேர்தல் யாழ்ப்பாணத்திலும் சூடு பிடிக்கும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. அதன் ஒரு கட்டமாக, நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் பொது மக்கள் தேர்தல் குறித்து மெல்லத் தம் வாய்திறந்து காதோடுகாதாக விவாதிக்கத் தொடங்கியுள்ளனர். தேர்தல் வரும், போகும் நமக்கென்ன என்றிருந்த யாழ்குடாநாட்டு மக்கள் அதுபற்றி ஆராயத் தொடங்கியிருப்பதால், கடந்த தேர்தலை விட இம்முறைத் தேர்தலில் வாக்களிப்பு வீதம் நிச்சயம் கூடுதலாகவேயிருக்கும் அதனோடு சேர்ந்து துண்டுப் பிரசுரங்களும்தாராளமாக வலம் வரும்.

---

# வைத்தியம் பார்க்கும்போதே நீரிழிவு என்னும் நோய் அதிகமாவது ஏன் என அறிய வேண்டும்

சென்றவாரத் தொடர்ச்சி

**மருத்துவ விளக்கம்**

டாக்டர் சித்திக்ஜமால்
B. Sc, M. B. B. S, M. D. (ACU)
டாக்டர் பஸ்லூர் ரஹ்மான்
M. B. B. S, M. D, PH. D (A U)

### ஆங்கில மருத்துவம்

ஆங்கில மருத்துவமானது கழிவுப்பொருளுக்குச் சமமான உடல் இயற்கையால் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்ட இந்த குளுக்கோஸ் உடல் செல் அணுக்களுக்குள் வலுக்கட்டாயமாகத் திணிக்கிறது. இதற்காக உபயோகப்படுத்தப்படும் மருந்துகளாவன,

1) இன்சுலின் 2) க்ளோர்ப்ரோபமைட் 3) டால்புடமைட் 4) கிளிபென்கனமைட் 5) பைகுவானைட்ஸ் என்பனவாகும். இவை ஒவ்வொன்றைப்பற்றியும் பெரிதாகத் தெரிந்துகொள்ள ஒன்றுமேயில்லை. இவையனைத்துமே ஒரே குட்டையில் ஊறின மட்டைகள் தாம். காரணம் இவற்றின் அடிப்படை வேலை என்னவெனில், இரத்தத்திலுள்ள கழிவுப் பொருளுக்குச் சமமான குளுக்கோஸ் சிறுநீரகங்களால் கழிக்கப்படக்கூடாது. மாறாக அவற்றை நிராகரிக்கும் உடல் செல் அணுக்கள் வலுக்கட்டாயமாக, இயற்கைக்குமாறாக அவற்றை உபயோகப்படுத்த வைக்கிறது. ஆங்கில மருத்துவம் இன்றுவரை நீரிழிவுநோய்க்கான காரணத்தைக் கண்டுபிடிக்கவில்லை. பன்ரியாஸ் எனும் உறுப்பு வேலை செய்யாததுதான் காரணம் என்பது தவறான கருத்து. பன்ரியாஸ் ஏன் வேலை செய்யவில்லை என்பதில்தான் உண்மையான நீரிழிவுக்கான காரணம் பொதிந்துள்ளது. அது என்ன என்பதற்கான ஆராய்ச்சியின் பக்கம்இப்போதுதான் ஏறிட்டுப் பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த நிலையில் நீரிழிவு நோய்க்காகச் செய்யப்படும் வைத்தியம் அந்நோயைப் பற்றிய அரைகுறை அறிவுடன் தான் மேற்கொள்ளப்படுகின்றது. நீரிழிவைப்பற்றித் தெளிவான அடிப்படையே இல்லாமல் அந்நோய்க்கு வைத்தியம் அளிக்க முற்படும்போது நீரிழிவு நோய் நிபுணர்கள் எவ்வளவு குழப்பத்தில் இருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

1) நீரிழிவு நோய்க்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. இது குழப்பத்தின் ஆரம்பத்திற்கு அடிப்படை. 2) சர்க்கரையின் அளவு இரத்தத்தில் அதிகரிக்கும் போது நீரிழிவுநோய் அதாவது சிறுநீரில் சர்க்கரையும் சேர்ந்துவெளியாகிறது. இதில் என்ன குழப்பம் என்றால், பலசமயங்களில் சர்க்கரையின் அளவு இரத்தத்தில் அதிகமாக இருந்தும், சிறுநீரில்வெளிப்படுவதில்லை. இன்னும் சிலரிடையே இரத்தத்தில் சர்க்கரையின் அளவு மிகமிக் குறைவாக இருந்தபோதிலும் சிறுநீரில் வெளிப்படும். இந்த இரண்டு நிலைகளும் நீரிழிவு நோயினின்று எவ்விதம் வேறுபடுகின்றன. இவற்றின் முக்கியத்துவம் என்ன என்பதற்கான தெளிவு இன்னும் பிறக்கவில்லை.

3) ஒரு நோய்க்குக்காரணம் தெரிந்தால் மட்டுமே அந்தக் காரணத்தை நீக்குவதன் மூலம் நோயைக் குணப்படுத்த முடியும் என்பது ஆங்கில மருத்துவத்தின் கோட்பாடு மட்டுமல்ல, இது உலகறிந்த நியதி.

அது மட்டுமல்ல, ஒரு நோய்க்கான காரணம் தெரியும் பட்சத்தில் அந்நோயை வருமுன்னே தடுத்துவிட முடியும். உண்மை இவ்வாறிருக்க தகப்பனுக்கோ, தாய்க்கோ நீரிழிவுநோய் இருக்குமேயானால் பிறக்கும் குழந்தைக்கு 75 சதவிகிதம் நீரிழிவுநோய் ஏற்பட வாய்ப்புண்டு என்று நன்கு தெரிந்திருந்தும் அதை ஆங்கில மருத்துவத்தால் தடுக்க முடியவில்லை.

ஒருநோய் வந்தபின் குணப்படுத்த முயலுவதைக் காட்டிலும் வருமுன் காத்தலே சிறந்தது அதைப்போன்றே ஒரு நோய்க்கான உண்மையான காரணம் தெரிந்தால் அந்தக் காரணத்தைச் சீர்ப்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட நோய் உருவாகாமல் தடுக்கவும முடியும். ஆங்கிலமருத்துவத்தைப் பொறுத்தமட்டில் இவை இரண்டுக்குமே வழியில்லாமல் திணறுகிறது ஒரு நோய் சிறியதாய் அதாவது ஆரம்பக் கட்டத்தில் இருக்கும்போது அதன் தொந்தரவுகள் மிகக் குறைவாக இருக்கும். இந்த நோய் பெரிதாக வளரும் போது அந்தநோய் விளைவிக்கும் தொந்தரவுகள் அதிகமாவதுடன் பல புதிய தொந்தரவுகளையும் ஏற்படுத்துகிறது.

ஒவ்வொரு நீரிழிவு நோயாளியும் ஆங்கில மருத்துவத்தை முறையாக மேற்கொண்டு வரும்போதே நோயின் தீவிரம் அதிகமாகிவருவதை உணர்வர். மேலும் அதன் தீவிரத்தை பிரதிபலிக்கும் வகையில் பல புதிய தொந்தரவுகளையும் உணர்வர். உதாரணமாக 30 வயது மதிக்கத்தக்க ஒருவருக்கு நீரிழிவு நோய் கண்டுபிடிக்கப் படுகிறது. அவருக்கு அப்போது எந்தத் தொந்தரவும் கிடையாது. பத்துவருடங்கள் வைத்தியத்திற்கு பிறகு, அவருக்குக் கால்களில் மதமதப்பும் எரிச்சலும் ஏற்படுகிறது. கைகால்களில் உளைச்சல் ஏற்படுகிறது, தூக்கம் சரிவரப் பிடிப்பதில்லை. உடல் மெலிந்து கொண்டேபோகிறது. இப்போதெல்லாம் கண்கள மங்கிக்கொண்டே போகிறது. எப்போதும் சோர்வாக இருக்கிறது. சில வருடங்களாக இரத்தக் கொதிப்பு ஆரம்பமாகியுள்ளது. ஆண்மையும் குறைந்துவிட்டது, சிலமாதங்களாகக் கால்கள் வீக்கமடைகின்றன. வயிற்றில் அல்சர் உபாதையால் கஷ்டப்படுகிறேன் என்று நீரிழிவு நோயின் தீவிரத்துடன் சேர்ந்து மற்றத் தொந்தரவுகளையும் அடுக்கிக் கொண்டே போவார். இதற்கு முழுப்பொறுப்பேற்க வேண்டியது ஆங்கில மருத்துவம் தான். காரணம் நீரிழிவு நோய்க்கான அடிப்படைக் காரணம் என்ன என்பது பற்றி தனக்கே விளங்காமல் முழுக்குழப்பத்திலிருக்க, தன்னை விஞ்ஞான சுகாதாரதி திட்டம் என்ற தவறான அபிப்பிராயத்தை மக்களிடையே புகுத்தி அவர்களையும் நம்பவைத்து வைத்தியம் புரிந்துவருவது ஆங்கில மருத்துவம் மட்டும் தான்.

5) தாய் தந்தையர் நீரிழிவு நோயல் பதிக்கப்பட்டிருந்தால் பிறக்கும் குழந்தையும் அதேநோயால் பாதிக்கப்படும் என்பது நிச்சயம். உதாரணமாக குழந்தை பிறந்து 18 வது வயதில் நீரிழிவு நோய் தோன்றுகிறதென்று வைத்துக்கொண்டால், இந்தப் பதினெட்டு வருடங்களும் நீரிழிவு நோய் தோன்றுவதினின்றும் காப்பாற்றியது எது என்பதற்கான உண்மையான விளக்கம் இன்றுவரை ஆங்கில மருத்துவத்துக்குத் தெளிவாகவில்லை.

6) ஊசிகள், மருந்துகள் போன்றவைகளை முறையாகத் தேர்ந்தெடுத்து உபயோகப்படுத்தி, சர்க்கரை வியாதியை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் உயிருக்கே ஆபத்து என்று கூறுகிறது. நீரிழிவு சிறப்பு சிகிச்சை நிபுணரிடம் பல வருடங்களாக முறையாகச் சிகிச்சை பெற்று வருபவருக்கு, ஒன்றன் பின் ஒன்றாக நீரிழிவு சிறப்பு சிகிச்சையில் இருக்கும் போதே ஒவ்வொரு நோயாளியும் நீரிழிவு நோய் வீரியத்திற்கும், அதனைச் சார்ந்த விளைவுகளுக்கும் பலியாகிறார்களே? சர்க்கரை அளவைக்கட்டுப்பாட்டில் வைத்திருந்தும், அதனைச் சார்ந்த (நீரிழிவு என்னும் சர்க்கரை நோயைச் சார்ந்த) விளைவுகள் நாளடைவில் தோன்ற ஆரம்பிக்கிறதென்றால் ஆங்கில மருத்துவமானது இரண்டு கேள்விகளுக்கு நேரிடையான தெளிவான பதிலைச் சொல்லக் கடமைப் பட்டிருகிறது.

(1) நீரிழிவு நோய் கட்டுப்பாட்டிலிருக்கும் போது முறையாக மருந்துகளை உட்கொள்ளும் ஒருவருக்கு நீரிழிவுநோயைச் சார்ந்த விளைவுகள் எவ்வாறு தோன்ற முடியும்?

(2) ஒரு நோயானது மேலும் மேலும் முற்றும் போது தானே அதைச் சார்ந்த தீவிர விளைவுகள் ஏற்படும்? ஒருநோயாளிக்குப் பல வருடங்கள் தீவிர சிகிச்சைக்குப் பிறகும் நிச்சயமாக நோயைச் சார்ந்த விளைவுகள் அதிகமாகிறதென்றால், இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் குறைப்பது தான் வைத்தியம் என்பது அர்த்தமில்லாததுதானே? □

---

## தினசரி தியானம்

### முமுக்ஷுத்வம்

தித்திக்கும் தெள்ளமிர்தை சித்தாந்தத்
துட்பொருளை
முத்திக்கு வித்தை முதனினைப்ப
தெக்காலம்

பத்திர கிரியார்

சச்சிதானந்த சிவமே, உன்னை நான் அடைந்தாக வேண்டுமென்று முழு மனதோடு முயன்றால் நொடிப் பொழுதில் உன்னில் நான் ஒன்றித்து விடுவேன்.

தண்ணீருக்குள் அமிழ்த்தி வைக்கப்பட்டிருப்பவனுக்கு வேறு எந்த விதமான நாட்டமும் உண்டாவதில்லை. சுவாசிப்பதற்குக் கொஞ்சம் காற்றுக் கிடைத்தால் போதுமென்று அதன் பொருட்டே அவன் திணறுவான், உயிரைக் காப்பாற்றத் திண்டாடுவது போன்று தெய்வத்தை அடையத் திண்டாடுவது முமுக்ஷுத்வம்;

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

---

## கூட்டணி சார்பில் போட்டியிடுவோர் பெயர் பட்டியல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் நான்கு தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பின் பொது வேட்பாளர் பட்டியலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிடுவோரின் பெயர்ப் பட்டியல் நேற்று வெளியானது.

ஐவர் கொண்ட தெரிவுக் குழு கூட்டணி சார்பில் போட்டியிடும் 7 பேரை நேற்று தெரிவு செய்தது.

யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வி. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராஜா, எஸ். சிவமகாராஜா மற்றும் யாழ். மாநகர முதல்வர் என். ரவிராஜ், யாழ். மாநகரசபை உறுப்பினர் சி. அரவிந்தன், சமூக சேவையாளர் பி. ஜி. தங்கவேல், முன்னாள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க. சந்திரராஜா ஆகியோருடைய பெயர்களே மேற்படி ஒழுங்கில் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. [உ-77]

## கைதியைத் தேடி பொலிஸார் வலைவிரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சமயம் கடந்த சனியன்று தப்பியோடிய சிறைக் கைதியான ஜோப்பாய் வாசியை தேடிப் பிடிக்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டிருப்பதாக யாழ். சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10)

# ஜே.வி.பியின் ரகசியவங்கி கணக்கை பகிரங்கப்படுத்த ஆதாரம்

## சண்டே லீடர் சவால்

(கொழும்பு)

ஜே. வி. பியை சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் இரகசிய வங்கிக் கணக்குப் பற்றியும், அக்கணக்கினை பேணி வருபவர்கள் தொடர்பாகவும் தம்மிடம் ஆதாரம் இருப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் 'சண்டேலீடர்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இரகசிய வங்கிக் கணக்கு விவகாரம் தொடர்பாக ஜே. வி. பியால் நீதிமன்றம் செல்ல முடியுமா என சவால் விடுத்துள்ள லீடர் பத்திரிகை அவ்விடயம் குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது;

ஜே வி. பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச மற்றும் அமைச்சர் மங்களசமர வீரவின் செயலாளர் றுபான் வேதிநெதி ஆகிய இருவரின் பெயரிலேயே இரகசிய வங்கிக் கணக்கு பராமரிக்கப்படுகிறது;

இக்கணக்கினை மேற்படி நபர்கள் இருவரும் மல்வானையில் உள்ள முகமட் என்பவரின் பெயரைப் பயன்படுத்தி பேணிவருவதாகவும் இதனை முகமட் உறுதிப் படுத்தியுள்ளாரெனவும் லீடர் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இரகசிய வங்கிக்கணக்குப்பற்றிய செய்தி ஐக்கியதேசியக் கட்சியின் திட்டமிட்ட பொய்ப் பிரசாரம் என்றும் இதனை உறுதிப் படுத்தினால் தான்பதவி விலகுவதுடன் ஜே. வி. பிக்கட்சியையும் கலைக்கதயாராக இருப்பதாக விமல்விரவன்ச தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சண்டே லீடர் பத்திரிகை தனது செய்தி ஊடாக விமல் வீரவன்ச பற்றிய இரகசிய வங்கிக் கணக்கு விபரத்தை வெளியிட உள்ளதாக எச்சரித்துள்ளதுடன் அவர் தனது பதவியை துறக்கத் தயாரா எனவும் கேள்வி எழுப்பியுள்ளது. (இ)

## குறைநிவர்த்தி சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தமிழ் ஆசிரியர் சங்கம் கல்வித்திணைக்களங்களுடன் இணைந்து நடத்தும் குறைநிவர்த்தி சேவை நேற்று யாழ்கல்வித் திணைக்களத்தில் ஆரம்பமானது.

இக்குறைநிவர்த்தி சேவை இன்றும, நாளையும் பிற்பகல் ஒருமணிமுதல் நடைபெறும் யாழ்ப்பாணம், நல்லூர் கோப்பாய் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்தவர்கள் இதில் கலந்துகொண்டு தங்கள் குறைகளை எடுத்துக்கூறலாம் என்று யாழ்மாவட்டச் செயலாளர் க. குமாரசுவாமி அறிவித்துள்ளார். (வ)

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மீனவர்சங்கங்களின் சமாசத்தினால் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உண்ணாவிரதப் பேராட்டத்திற்கும் ஹர்த்தாலுக்கும் தாம் பூரண ஆதரவு வழங்குவதாக வல்வெட்டித்துறை நகரசபையின் உபதலைவர் எஸ் சந்திரசேகரம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். (ந)

மீனவர்களின் பகிஷ்கரிப்புக்கு

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் முழு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இன்று நடைபெறும் மீனவர் பகிஷ்கரிப்பு மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்துக்குதமது முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாக யாழ். பல்கலைக்கழக மாணவர்ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியத் தலைவர் செ. கஜேந்திரன் செயலர் எம். சுகுவேஸ்வரன் ஆகியோர் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தனர். அவ்வறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கடந்த இருபது வருடங்களுக்குமேலாக தொடரும் யுத்தத்தினால் கடற்றொழிலாளர்கள் அனுபவிக்கும்துன்ப துயரங்களுக்கு அளவு இடையாது.

தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் மீது படையினர் நடத்தும் அடாவடித்தனங்கள் அதிகரித்து செல்வதுடன் படகுகளை எரித்தல், பீரங்கித் தாக்குதல் நடத்துதல் வலைகளைப், படகுகளை பறித்துச் செல்லுதல் என்பன தொடர்கதையாகவுள்ளது.

மீனவர்களின் இத்தகைய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண மீனவர்கள் சமூகம் முன்னெடுத்துள்ள போராட்டத்திற்குஒத்துழைப்பும் ஆதரவும் வழங்குவோம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சிறுபான்மைக் கட்சிகளுக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது

### பிரதமர் ரட்ண ஸ்ரீ கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும்டிசெம்பர்மாதம் 5ந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் மக்கள் சிறுபான்மைக் கட்சிகளுக்கு வாக்களிக்கக் கூடாதென்று பிரதமர் ரட்ண ஸ்ரீ விச்கிரம நாயக்கா கேட்டுள்ளார்.

பொதுத் தேர்தலில் மக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கே வாக்களித்து அதனை வெற்றியடையச்செய்யவேண்டும்.

மக்களுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி மீது விருப்பம் இல்லை யென்றால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கலாம் ஆனால் சிறுபான்மைக் கட்சிகளைப் பலப்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஒருபோதும் வாக்களிக்கக் கூடாதென்று ரட்ண ஸ்ரீ விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

சிறுபான்மைக் கட்சிகள் அரசாங்கத்தை நிர்ணயிக்கும் நிலை மாற்றப்பட வேண்டுமானால் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மக்கள் வாக்களிப்பதே சிறந்ததென்றும் பிரதமர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரட்ண ஸ்ரீ விக்கிரமநாயக்காவின் உண்மையான சுயரூபமும் அவரின் பேரினவாதக் கொள்கையும் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர். (இ)

## மக்கள் பணியிலிருந்து நாம்விலகிவிட மாட்டோம்

### வி. கே. ஜெகன் உரை

தேர்தலை மட்டும் மனதில் கொண்டு ஈ. பி. டி. பியினர் ஒரு போதும் செயற்படுவதில்லை மக்களுடன் மக்களாக நின்று அன்று தொட்டு இன்று வரை மக்களுக்காகவேசேவை செய்து வருகிறோம்.

இவ்வாறு ஈ பி. டி. பியின் யாழ் மாவட்டபிரதமஅமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமானவே. வி குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து வாழும சுமார் 300பேர் அண்மையில் ஈ. பி. டி. பியின் யாழ் மாவட்ட அலுவலகத்தில் ஜெகனைச் சந்தித்திருந்தனர்.

அவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் ஈ.பி டி. பியினராகி நாம் என்றுமே மக்கள் மத்தியிலிருந்து அன்னியப்பட்டு விடப்போவதில்லை.

இன்று தமிழ்க்கட்சிகள் எல்லாம் கூட்டுச் சேர்ந்துள்ளனர் இக்கூட்டினால் இவர்கள் சாதிக்கப் போவது ஒன்றுமில்லை இவர்களின் இக்கூட்டு எம்மைஎமதுசேவைகளிலிருந்தோ அல்லதுகொள்கைகளிலிருந்தோமாற்றிவிடமுடியாது.

நாம் என்றும் மக்களுக்குச் சேவை செய்யவே காத்திருக்கின்றோம் கடந்த ஒரு வருட காலத்தில் எந்தவொரு கட்சியோ அமைச்சரோ செய்திராத வேலைத் திட்டங்களை நாமும் எமது அமைச்சரும் செய்துள்ளோம்

இப் பணிகளில் இருந்துநாம் என்றுமே மாறிவிடமாட்டோமென்றும் கூறினார்

இதேவேளை மயிலிட்டி மக்களின் இடம் பெயர்வுக்குரிய நட்டஈடு, மீன்பிடிக்கைணப்படும் தடை நீக்கம், மற்றும் மேலதிக நிவாரணம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை கவனத்தில் எடுத்த ஜெகன் அவர்கள கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுடன் பேசி நல்லமுடிவுதருவதாக தெரிவித்தார் (இ)

## வாணி விழா

இலங்கை வங்கி யாழ் மேற்தரக்கிளையின் வாணி விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இவ்விழாவில் கலைநிகழ்வுகளுடன் சக்திமகிமை எனும் பொருள் பற்றி கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் விஜயசுந்தரம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

## நிரந்தர

அனுப்பிவைக்கப்பட்டுள்ளது;

இச் சுற்று நிருபத்தின் படி 99 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ம் திகதிக்கு முன்னர் குறைந்தது ஒருவருட சேவையைப்பூர்த்தி செய்த 18 க்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய க. பொ. த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த தொண்டராசிரியர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

அதேவேளை 99 ம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ந் திகதிக்குப்பின்னர் தொண்டராசிரியராக நியமனம் பெற்றவர்கள் நிரந்தரமாக்கப்படமாட்டார்களென்றும் அவர்களது சேவையை உடன் நிறுத்துமாறும் அச் சுற்று நிருபத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. [ந]

## ஐ. தே. க.

வ்ட்டது என்றும் புத்திரசிகாமணி கூறியுள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியில் இருந்து பொதுஜனஐக்கிய முன்னணிக்கு மாறிய புத்திரசிகாமணி முன்னாள் ஜனாதிபதியான ஜே. ஆர் ஜெயவர்த்தனா, பிரேமதாசா, டி. பி. விஜயதுங்கா ஆகியோருக்கு மிகவும் வேண்டியவராக இருந்தவர்.

இவரைத்தொடர்ந்து மேலும் பலர் ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து பொதுஜன ஐக்கியமுன்னணிக்கு மாறவுளளதாகத் தெரியவருகிறது. (வ)

## வவுனியாவில்

காகிச் சிதறியது.

இத்தாக்குதலில் உழவுஇயந்திரத்தில் பயணம் செய்த ஒரு பொலிசாரும் ஒரு ஊர் காவற் படையைச் சேர்ந்தவரும் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் சம்பவத்தை யடுத்து அப் பகுதி எங்கும் படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர்.

இதேவேளை வவுனியாவில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## குடாநாட்டை

ரல் லயனல் பலகல்ல கடந்த சனிக்கிழமை தனது உயரதிகாரிகளுடன் மணலாறுக்கு விரைநது சென்றுள்ளார்.

அங்குள்ள பாதுகாப்புநிலைமைகளை நேரில் அவதானித்ததுடன், விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்குஇலக்காகலாம் எனக்கருதப்படும் இடங்களின் பாதுகாப்பை அதிகரிப்பது குறித்தும், மணலாறு பகுதிப் பாதுகாப்புக்குறித்தும் உயர்படை அதிகாரிகளுடனும் அவர் ஆராய்ந்துள்ளார்.

இதேவேளை காங்கேசன் துறைமுகம் மீதுகடற் புலிகள் கடல்வழித்தாக்குதல்களை நடத்தக்கூடிய சாத்தியம் இருப்பதாகபுலனாய்வுப்பிரிவினர் எச்சரித்துளளனர்.

இதனையடுத்து காங்கேசன் துறைமுகப்பகுதி தீவிர பாதுகாப்புகுட்படுத்தப்பட்டுளளது. வடபகுதி கடற் பிராந்தியத்தில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் இரவு நேரத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ)

## தமிழ்க்

அல்லது பகைமை முரண்பாடுகளுக்கு முதன்மை கொடுத்து குறுகிய அரசியல் லாபத்தை மேற்கொள்ளக் கூடாதெனவும் தமிழ் அறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே இணைந்துள்ள நான்கு தமிழ்க் கட்சியின் கூட்டமைப்பில்மேலும்சிலகட்சிகள் இணைய விரும்பியபோதும்அவை புறக்கணிக்கப்படுவதையிட்டு தமிழ் அறிஞர்கள் அதிருப்தி வெளிப்படுத்தியுள்ளனர். (வ)

## விடுதலைப்

வது;

ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எதிரணியினர் நடந்து கொண்ட தன்மையினாலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாமல் இருக்கிறது. உண்மையைச்சொல்லப்போனால் எதிரணிக் கட்சியினருக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எந்த வித ஆர்வமே, விருப்பமே இல்லை. இதனாலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காணமுடியாதுள்ளது. எதிர் வரும் பொதுத் தேர்தலில் நாம் வெற்றி பெற்றதும் விடுதலைப் புலிகளுடன் பேசி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்போம்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்ற உறுதியான தன்மை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிடமே உண்டு ஆனால் இனப்பிரச்சினைத்தீர்வு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உருப்படியான திட்டம் எதனையும் வைத்திருக்கவில்லை 2002 ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைத்ததும் இனப்பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து தீர்வு காணப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார். (வ)




காலத்தால் அழியாத கற்பனைக்கு எட்டாத தங்க வைர நகைகளுக்கு

நிருத்திகா ஜுவலர்ஸ்

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 - 2694

(இ- 2367)


இப் பத்திரிகை ""வலம்புரி"" அன் கோ விளம்பரத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.